1217

M. 1803. Vol. I—No. 6.

12

லக்ஷ்மி

22 FEB 1924

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

SARMA BROS MADRAS

வைகௌண்ட் காஸ்ச்சன்

வரப்போகிற சென்னை மாகாணக் கவர்னர்.

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. ருத்ரோத்காரிஹூ தைமீ 1924 ஜனவரி இதழ் ௬

22 FEB 1924

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	255
2.	மலர் வனம்	256
3.	தைப் பொங்கல்	257
4.	விவேக விசாரங்கள்	260
5.	கோட்டை வேளாளர்	266
6.	கடிகாரம்	272
7.	நினையாத பாக்கியம்	273
8.	அன்பு	281
9.	இன்சொல்	285
10.	"லக்ஷ்மி" துதி	288
11.	மதிப்புரை, உலகப்போக்கு ...	289
12.	உள் மனம்	290
13.	மனோன்மணீய வசனம்	296
14.	நீண்ட ஆயுள் வாழ்ந்த மக்கள் ...	302

சித்திரப் படங்கள்.

1. வைகௌண்ட் காஸ்ச்சன்

2. மஹாத்மா காந்தி.

210334

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2.
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2-8.
உயர்ந்த பதிப்பு (Art Paper)	... ...	ரூ. 10

தனிப்பிரதி 4 அணு.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 15. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு சடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் நமது சஞ்சிகை வெளிவரும்.

மானேஜர்.

சுகசாதனம்

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்

உங்களுக்கு அவசியம் தேவையானது. உடனே எழுதுங்கள்.

வைத்திய அநுபவங்கள், வாழ்க்கை மர்மங்கள், ரகசியக் குறிப்புகள், விவாக மானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்கள் சம்பந்தமான பலவகை விவரங்கள், இல்லற சார சங்கிகம் ஆகிய பலவும் அடங்கிய ரகஸ்ய ரத்னம் உங்களுக்கு அவசியம் தேவையான புஸ்தகம். விலை இல்லை, தபாற் செல வில்லை விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
டிப்போ, 165, பிராட்வே,
தபாற்பெட்டி 222, மதராஸ்

ஓம்

லக்ஷ்மி துதி

அனமே ! இளங்குயிலே ! மயிலே!
புள்ளி யார்மட மான்
இனமே ! பசுங்கொடியே! பிடியே!
அணியேந்து கொம்பே !
புனமே வருங்கிள்ளையே ! பிள்ளை
யென்னகம் புக்கிருக்கும்
தனமே நலந்தருவே ! திருவே !
எற்குன் தாள் கதியே!

உ

மலர் வனம்

முத்தங் கொழித்து மணி சிதறி
 முதுசொற் புலவோர் மனம்போல,

முழுதும் விரிந்து பெருக்கெடுத்து
 முழங்கிக் குதிக்கும் பொருநை வெள்ளம்,

தத்தும் திரைத்தீம் புனல் எற்றித்
 தருமம் விளைத்துத் தமிழ்வளர்க்கும்

தடஞ்சார் பதிகள் பல வற்றுள்
 தலைமைக் குரிய பசுஞ்சாலி

சுற்றும் பதியைப் புரக்கவரும்
 சோலைக் கிளியே! மரக்காவைச்

சூழ்ந்து படர்ந்த வெளிய முகை
 சுரும்பார் குழற்பெண்! நின்முறுவல்

எத்து மெனவே கவிபாடும்
 இளங்கோ கிலமே! மாலதியே!

இசைத்தேன் துளிக்கு நின்கனிவாய்
 இசைந்தோர் முத்தம் அருளுகவே.

வ. வே.

தைப் பொங்கல்

தைப் பொங்கல் தென்னாட்டு ஹிந்துக்க ளனைவருக்கும் முக்கியமான ஒரு பண்டிகை. கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்த்மஸும், மகமதியர்களுக்கு மொஹறாமும், மலையாளிகளுக்குத் திருவோணமும், புனிதப் பண்டிகைக ளாக ஏற்பட்டிருப்பது போல, தமிழ் நாட்டாருக்கு இத் தைப் பொங்கற் பண்டிகை பண்டைக் காலந்தொட்டே மிகுந்த மனமகிழ்ச்சியைக் கொடுக்கும் பெரு நாளாக வழங்கி வருகின்றது.

தென்னாட்டின் நானா பாகங்களிலும் இப் பண்டிகை பல வேறு வகையாகக் கொண்டாடப்பட்டு வரினும் அடிப்படையான கொள்கையில் ஒருவித பேதமும் இல்லையென்றே சொல்ல வேண்டும். இந் நன்னாளிலே தமிழ் நாட்டா ரெல்லாம் ஸ்நானஞ் செய்து, சுகந்தத் திரவியங்களணிந்து, புத்துடை தரித்து, பொங்கலிட்டு, அகில லோக நாயகனாகிய சூரியனை வணங்கி, அறுசுவை யுண்டியருந்தி, உற்றார் பெற்றார் உறவினரோடு கூடியுலாவிக் குதூஹலமடைகின்றனர்.

இல்லற வாழ்க்கையில் உளதாகும் இடைஞ்சல்களையும் இன்னல்களையும் அறவே மறந்து இயற்கையோடொன்றி இன்ப மடைகின்றனர். பாலர், விருத்தர், ஆடவர், பெண்டீர் ஆகிய அனைவரும் ஆநந்த மயமாகவே விளங்குகின்றனர். இந்நன்னாளே தமிழுலகத்தின் பொன்னாளாம்.

பண்டிகையின் வரலாறு.

இப் பண்டிகைக்கு மகரச் சங்கராந்தி யென்றும் இன்னொரு பெயருண்டு. உத்தராயனம் இப்பண்டிகை யன்றே

ஆரம்ப மாகின்றது. இராவணனது ஆக்கினைக்குப் பயந்து சூரியன் பூமியின் மத்திய ரேகை வழி செல்வ தில்லையாம். ஆறுமாதம் வட முகமாகவும் ஆறு மாதம் தென் முக மாகவும் ஆதித்ய பகவான் பூமியைச் சுற்றிச் செல்கின்றாராம். தென் முக யாத்திரை அல்லது தட்சணாயனம் கழிந்து வட முக யாத்திரை அல்லது உத்தராயனம் தொடங்குவது இப் பொங்கற் பண்டிகை அன்று தான். ஆனது பற்றியே தமிழ் நாட்டார் தைப் பொங்கலன்று சூரியனுக்குப் பொங்கலிட்டு வழி படு கின்றனர்.

பொங்கல் பண்டிகையின் தலைநாள் சில இடங்களில் போகிப் பண்டிகை கொண்டாடப் படுகின்றது. போகிப் பண்டிகை இந்திரனுக்கு இயற்றும் விழாவாகும். இந்திர விழா பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டு வந்தது. இதன் வரலாற்றைச் சிலப்பதிகாரத்தில் பரக்கக் காணலாம்.

தேவேந்திரப் பிரீதிக்காகக் கோபாலர்கள் ஆண்டு தோறும் இந்திர விழா நடத்தி வந்ததும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஏவலால், இந்திர விழாவுக்குச் சேர்த்த பண்டங்களைக் கொண்டு கோபாலர்கள் கோவர்த்தன கிரிக்குப் பூஜை செய்ததும், ஸ்ரீ கிருஷ்ண பகவான் அப் பூஜையை ஏற்று மகிழ்ந்ததும், தேவேந்திரன் கோபங்கொண்டு தன் படைகளாகிய மேகங்களை ஏவிக் கோபாலர்கள் எல்லாம் ஜலப் பிரளயத்தால் நாசமடையு மாறு மழை பொழியச் செய்ததும், உடனே கோபால கிருஷ்ணன் தன் பக்தர்களான கோபாலர்களைக் காக்கும் பொருட்டு கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்ததும் நம்மவர்கள் எல்லாம் அறிந்த புராண கதை யன்றோ ?

ஆதி காலத்தில் இந்திரப் பிரீதிக்காகக் கொண்டாடப் பெற்ற இப் போகிப் பண்டிகை (போகி = இந்திரன்) மேலே கூறிய சம்பவம் நடந்தது முதல் ஸர்வ வியாபியாகிய கடவுளை உத்தேசித்தே கொண்டாடப் படுகின்றது. பொங்கலன்று சில சமயங்களில் மழை பெய்வதும் அம் மழை அவ் வருஷத்திய நற் பலனுக்கு அறி குறியாகக் கருதப் படுவதும் தமிழ் நாட்டின் பழைய வழக்கமாம்.

தைப்பொங்கல்

பொங்கற் பண்டிகையின் ஆகமத்தைப் பற்றிப் பல வாறு சொல்லப் பட்டாலும் இப் பண்டிகை நிமித்தம் தமிழ் நாடு முழுமைக்கும் பெருத்த நன்மை யுண்டாகின்ற தென் பதற்குச் சிறிதளவும் ஐயப் பாடில்லை.

பொங்கலன்று மாளிகை முதல் குடிசை ஈறுக வுள்ள தமிழகத்து இல்லங்க ளெல்லாம் வெண்மை தீற்றி மெழுகிச் சுத்தஞ் செய்யப் படுகின்றன. இடிந்து தகர்ந்து பாழடைந்த இடங்க ளெல்லாம் பழுது பார்க்கப் படுகின்றன. பயனற்ற பழம் பொருள்க ளெல்லாம் களையப் படுகின்றன. பார்க்கு மிட மெல்லாம் தோரணங்கள் கட்டியும் கோலங்களிட்டும் அணி பெற விளங்குகின்றது. லக்ஷ்மி தேவி எங்கணும் நிர்த்தனம் செய்வதாகத் தோன்றும்.

இவ் வாநந்தக் காட்சி தமிழ் நாடனைத்துக்கும் பொது வானதே.

சுகாதாரச் சார்பாக நோக்கு மிடத்து இப் பண்டிகை எத்தகைய நன்மை யுடையதென்று சொல்லவும் தகுமோ? உண்மையில் இப் பொங்கல் நாள் தமிழகத்தின் நலம் பொங்கும் நன்னாளே!

தைப் பொங்கல் கழிந்த மறு நாள் மாட்டுப் பொங்கல். வேளாண்மையே குலத் தொழிலாக வுடைய தமிழர்களுக்கு, பசுவும் எருதும் இன்றியமையாத மிருகங்கள் அல்லவா? ஆகவே இம் மங்கல நாளன்று தமிழர்கள் இக் கால்நடைகளையும் மறப்பதில்லை.

மாட்டுத் தொழுவங்களைச் சுத்தம் செய்து மாடுகளையெல்லாம் குளிப் பாட்டி அலங்கரித்து மாட்டுத் தொழுவங்களிலும் பொங்கலிட்டு மகிழ்கின்றனர். சில விடங்களில் மாட்டுப் பந்தயங்கள் நிகழ்வது முண்டு.

இவ்வாறுகத் தமிழகத்தார்க் கெல்லாம் மகிழ்ச்சியைக் கொடுக்கும் தைப் பொங்கல் ஆண்டாண்டு தோறும் புதுப் புது இன்பஞ் செறிந்து வருவதாக!

விவேக விசாரங்கள்

ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக சுவாமிகள் எழுதியது.

ஓர் அரும்பானது புஷ்பிக்குங் கால் அதன் சுகந்தம் பக்கங்களி லெல்லாம் பரிமளிக்கின்றது. அது போன்று மோக்ஷ இச்சையுடைய ஒருவன் ஞானியாகுங் காலத்து அவனுடைய சுத்த வாசனையானது சுற்றெல்லாம் வியாபிக்கின்றது.

****

கரும்பின் ருசியை யானை அறியுமே யன்றிக் கழுதை அறியாது. அது போலவே ஞானிகளின் தன்மையை விவேகிகள் அறிவார்களே யொழிய மூடர்கள் அறியார்கள்.

****

ஓர் பாட்டையில் சென்று கொண்டிருந்த பிரயாணி ஒருவன் வழியில் ஒரு முற்றின தேங்காய் கிடக்கக் கண்டான். அவன் அதைக் கையில் எடுத்துச் சுற்றிச் சுற்றிப் பார்த்து அதில் ஒன்று மில்லை யென்று நினைத்து அவ்விடத்திலேயே அதை யெறிந்து விட்டுப் போனான். அவ் வழியே இரண்டாவது சென்ற ஒருவன் அதைப் புரட்டிப் பார்த்து அதில் ஏதேனும் புசிப்பதற் கேற்றது இருக்குமென்றெண்ணி அதைப் பல்லினால் கடித்துச் சவுரியில் சிறிது பாகம் எடுத்து விட்டான். ஆயினும் அவனுடைய பல்லில் ரத்தம் வந்து விட்டமையால் அதற்கு மேல் செல்ல முடியாமல் அதில் ஒன்றும் இருக்காதென நினைத்து அதை அவ்விடத்திலேயே போட்டு விட்டுச் சென்றான். அதே வழியில் மூன்றாவதாகச் சென்ற ஒருவன் அத் தேங்காயைக் கண்டு தன் பசிக் குதவக் கூடிய ஏதேனுமொன்று அதனுள் ளிருக்கலா மென்று கருதி, தன் பல்லினாலும், கையினாலும் வேலை செய்து மீந்திருந்த சவரியையும் எடுத்து விட்டான். சவரியை எடுத்து விட்டுப் பார்த்த பொழுது அங்குச் சிரட்டையைக் கண்டான். "ஆ! ஆ! மோசம் போனேமே. இதற்காக எவ்வளவு பிரயாசைப் பட்டோம்? இது கல்போ லிருக்கின்றதே. இதனால் என்ன உபயோகம்?" என்று நினைத்து அவனும் அதை அவ்விடத்

திலேயே போட்டுவிட்டுப் போயினன். நான்காவதாக அவ் வழியே அரிவாள் கொண்டு சென்ற ஒருவன் அத் தேங்காயைக் கண்டு அதை அரிவாளினுல் உடைத்து உள் ளிருக்கும் பருப்பைக் கீறித் தின்று திருப்தி யடைந்தான். இது போன்று மனித ஜென்ம மாகிற மார்க்கத்திற் செல் லும் சிற் சிலர் சச்சிதானந்த மாகின்ற கடவுளின் சொரூ பத்தை மூடியிருக்கும் நாம ரூபத்தைப் பிரித்தெடுக்கச் சிறிது சிறிது முயன்று அம்மட்டில் நின்று விடுகிறுர்கள். ஞான சாதனம் கொண்டு செல்லும் ஒருவனே அச் சாத னத்தினுல் நாம ரூபத்தைத் தள்ளிக் கடவுளை அடைகின் ருன்.

***

ஓர் அரசனைக் கண்டு வெகுமதி பெறும் பொருட்டு இரண்டு சங்கீத வித்வான்கள் சென்ருர்கள். அவ்விரண்டு பேரும் இராஜ னிடத்திற் சென்று தனித் தனியே பாடி ஞர்கள். அரசன் அவ் விருவருடைய சங்கீதத்தையும் கேட்டு மிகுந்த சந்தோஷத்தை யடைந்தவனுய் அவர்களில் ஒரு வித்வானை நோக்கி "நாம் மிகுந்த சந்தோஷ மடைந் தோம். நீர் என்ன கேட்டாலும் கொடுக்கிறேம். உமக்கு வேண்டியது என்ன? சொல்லும்" என்ருன். அது கேட்டு, வித்வானும் களிப்படைந்து "மகாராஜாவே! அடியேன் மிகவும் ஏழை. பதினுயிர ரூபா இருக்குமானுல் சுகமாய்க் காலக்ஷேபம் செய்யலாமென்று நினைக்கிறேன்" என்று சொல்லி முடியுமுன், அரசன் தன் வேலைக்காரனை யழைத்து அவனுக்குப் பதினுயிர ரூபா கொடுக்கும் படி உத் தரவு செய்து விட்டு, இரண்டாவது வித்வானை நோக்கி "உமக்கு வேண்டிய தென்ன?" என்று கேட்டான். அவனும் மிக ஏழையா யிருந்த போதிலும் விவேகி யான தால் அவன், அரசனை நோக்கி "மகா ராஜாவே! எனக்கு யாதொன்றும் வேண்டிய தில்லை. மகா ராஜாவினுடைய கிருபைதான் வேண்டும்" என்று சொன்னுன். அரசன் கேட்டு இவனுக்கு அந்தத் தொகை போதாது போலிருக் கிறது என்று நினைத்துப் பதினையாயிர ரூபா கொடுக்கும் படி உத்திரவு செய்தான். வித்வான் "எனக்கு வேண்டுவ தில்லை. மகா ராஜாவினுடைய கிருபை தான் வேண்டும்" என்ருன். அரசன் "இருபதினுயிர ரூபாய் கொடுக்கட்டும்"

என்ருன். வித்வான் எனக்குப் பணம் வேண்டவே வேண்டாம். மகாராஜாவின் கிருபை தான் வேண்டும் என்ருன். இவ் விதமாக அரசன் பாதி ராஜ்ஜியம் வரைக் கொடுக்கும் படி உத்தரவு செய்தும் வித்வான் மறுத்து விட்டான். அரசன் திகைத்து இவன் ஒன்றும் வேண்டா மென்று சொல்லுகிருனே; இவனை நாம் எவ்விதத்தில் சந்தோஷப் படுத்துகிறது? என்று தனக்குள்ளேயே ஆலோசித்து முடிவில் ஒரு விதமாய்த் தீர்மானித்துக் கொண்டு வித்வானை நோக்கி "நீர் அரண்மனையில் தானே இரும்" என்று சொல்லி மற்ற வித்வானை விடை கொடுத்தனுப்பி விட்டான். பின்னர் அரசன் அவ் வித்வானுக்குப் பிரத்தியேகமாய் அரண்மனை ஒன்று கட்டுவித்து அவனுக்கு வேண்டுங் காரியங்களெல்லாம் ஏற்பாடு செய்து தன்னைப் போல் அவனையும் பார்த்து வந்தான். அது போலக் கடவுளானவர் தம்மை வழிபடுபவர்கள் ஏதேனும் ஒன்றை விரும்பிக் கேட்டால் அதைக் கொடுத்து விடுகிருர். வாங்கினவன் ஏமாந்தவனுகிருன். அதனுல் விவேகிகள் கடவுளிடத்தில் ஏதேனும் வேண்டுமென்று அபேக்ஷிக்கிறதில்லை. அவராகவே கொடுத்தாலும் வேண்டா மென்கிருர்கள். அவ்விதமாக நிராசையோடு அவரை வழிபடவே அவர் மிகுந்த சந்தோஷ மடைந்து அவர்களுக்கு நித்திய சுகத்தை அளித்து அவர்களைத் தாமே யாக்கிக் கொள்ளுகின்ருர்.

***

புளிப்பான சுவையை யுடைய மாங்கா யானது முதிர்ந்தவுடன் இனிப்புள்ள சுவை யுள்ளதாய் அது பற்றியிருந்த மரத்தின் கிளையை விட்டு நீங்குகின்றது. அது போல, யாவரும் வெறுக்கத் தக்க காமாதி அறுவகைத் துர்க்குணங்களை யுடைய மனிதன் விவேகத்தில் முதிர்ந்தவுடன் மைத்திரி யாதி யினிய குணங்க ளுடையவனுய்த் தான் பற்றி யிருந்த மாயா விருக்ஷத்தின் கிளையாகின்ற ஈஷணையை விட்டு நீங்குகின்ருன்.

***

[மைத்திரியாதி குணங்களாவன:—மைத்திரி, கருணை முதிதம், உபேட்சை, மைத்திரி—சற்புருடர் நட்பு; கருணை—வருந்துகின்றவரிடம் இரக்க முறுதல்; முதி

தம்—புண்ணியர்க ளிடத்து வைக்கும் விருப்பம்; உபேட்சை—விருப்பு வெறுப்பிலாதிருத்தல்.]

***

சம்சாரம் என்னும் சாகரத்தில் விஷயம் என்னும் கல்லோடு ஆசை யென்னும் பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் மாந்தர், வைராக்கியம் என்னும் கத்தியால் அப்பாசத்தை யறுத்து, சாதனம் என்னும் ஓடமேறி, சத்குரு வென்னும் மாலுமியால் ஞான மென்னும் வழியினூடு நடத்தப் பெற்ருல் மோக்ஷம் என்னும் கரையை அடைவார்கள்.

***

கெட்ட வாசனையை மூடி வைத்திருந்த போதிலும் அது வெகு தூரத்தில் சென்று பரவுகின்றது. அதுபோல ஒருவனுடைய துஷ் கிருத்தியங்களை எவ்வளவு மறைத்து வைத்திருப்பினும் அவை எங்கும் சென்று பரவும்.

***

தவளைகள் தாமரைப் புஷ்பத்தின் சமீபத்தி லிருந்தாலும் அதில் ஒழுகும் தேனை யுண்ண அறிகிற தில்லை. எங்கேயோ வுள்ள வண்டு வந்து அதை அருந்துகின்றது. அதுபோல, எத்தனை சமீபத்தி லிருந்தாலும் மூடர்கள் ஞானிகளிடத்தில் அறிய வேண்டிய வைகளை அறிகின்றிலர். விவேகிகளோ வெகு தூரத்தி லிருந்த போதிலும் ஞானிகளை அடுத்து ஞானமிர்தத்தைக் கிரகிக்கின்ருர்கள்.

***

மழைத்துளியானது பழுக்கக் காய்ச்சின யிரும்பில் விழுந்தால் காணுமற் போகின்றது. தாமரை யிலையில் விழுந்தால் முத்துப் போலாகின்றது. சமுத்திரத்துள்ள சிப்பியில் விழுந்தால் முத்தேயாய் விடுகின்றது. அதுபோல, குருவினுல் அனுக்கிரகிக்கப்பட்ட ஞானேபதேசமானது கிரகிப்பவர்க ளுடைய பக்குவத்துக்குத் தக்கபடி விளங்குகின்றது.

***

ஒரு குருடன் கிருமிகள் மொய்த்த மாம்பழம் ஒன்றை "மிகவும் நன்ருயிருக்கிறது" என்று புசிக்கின்ருன்,

அப்பொழுது அவனுடைய கண்கள் பார்க்கும் சக்தியைப் பெறுமாயின் எண்ணிறந்த புழுக்கள் அப்பழத்தில் நெளிவதைக் கண்டு அருவருத்தவனாய் அதைத தூரத்தில் எறிந்து விடுவான். அதுபோலவே "நன்று யிருக்கின்றது" "சுகமாயிருக்கின்றது" என்று சொல்லி உலக விஷயங்களை அனுபவிக்கும் மாந்தர்க்கு விவேகமானது திடீரென உதிக்குமாயின் அவைகளின் மேலுள்ள இச்சையை யொழித்து அவர்கள் தூரத்தில் விலகி விடுவார்கள்.

***

சத் சாஸ்திரங்கள் என்னும் பாற்கடலில் விவேகம் என்னும் மந்தரமலையை நட்டு ஆராய்ச்சி என்னும் வடங் கொண்டு கடையின் முதலில் சந்தேக விபரீதம் என்னும் விஷம் எழும். அதனைத் தெளிதல் என்னும் அரன் உணவாய் உட்கொண்டபின் கடைந் தெடுக்கப்படும் மெய்ஞ்ஞானம் என்னும் அமிர்தம் சத்குருவென்னும் பகவானால் பகிர்ந்து கொடுக்கப் பெறும். பக்குவர்கள் என்னும் தேவர்கள் ஆசை யென்னும் பசி தாகங்கள் நீங்கி, அஞ்ஞானம் என்னும் மிருத்யுவை ஜயித்து, சிதம்பரம் (சிதாகாயம்) என்னும் பொன்னகரில் வசிப்பார்கள்.

***

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, என்று சொல்லப்படுகின்ற நான்கு பூதங்களுக்கும் இடங் கொடுத்து அவைகளி லெல்லாம் நிறைந்திருக்கும் பூதமாகிய ஆகாயமானது பிருதிவி பூதத்தின் ஓர்விதப் பரிணாமமும் அளவு கருவியுமாகின்ற மரக்காலிலும் நிறைந்திருக்கிற தென்றுணராமல் அவ் வாகாயத்தை மரக்கால் கொண்டு அளவிடப் புகும் அறிவிலியை நிகர்த்துப் பிருதிவி முதல் நாதம் இறுதியாகச் சொல்லப் படும் சகல தத்துவங்களுக்கும் ஆதாரமாய் அவைகளி லெல்லாம் வியாபித்துப் பரிபூரணமாக நிற்கும் பரவஸ்துவானது தமது மனோ வாக்குகளிலும் பூரணமாய் நிறைந்திருக்கிற தென்பதை ஓராமல் அப்பரம் பொருளை மனதினால் கணிக்கவும் வாக்கினால் அளக்கவும் சிலர் பிரயாசப் படுகின்றனர்.

***

விவேக விசாரங்கள்

வெள்ளை, சிவப்பு, நீலம், முதலிய பல நிறங்களை யுடைய கண்ணாடிகளாற் செய்யப்பட்ட அறையொன்றிற் புகுந்த ஓர் ஞமலி சுற்றிலு முள்ள கண்ணாடிகளிற் பல நிறத்தனவா யுள்ள அநேக நாய்கள் பிரதி பிம்பித்துத் தோன்றுவதைக் கண்டு எங்ஙனம் முறு முறுத்துக் குரைக்கின்றதோ அங்ஙனமே, பல வேறுபாடுகளை யுடைய முக்குணங்களால் நியமிக்கப்பட்ட இச் செகத்தின்கண் புகுந்த மாந்தரிற் சிலர், தம்மைச் சூழ்ந்துள்ள ஜீவர்கள் யாவரும் ஒரே (தமது) ஆத்மாவின் பிரதி பிம்பங்களென் றுணராமல் அவர்களோடு சீறித் துவேஷிக்கிறார்கள்.

***

பல கிளைகளை யுடைத்தா யிருக்கும் மரமானது காற் றடிக்கும் பொழுது மிகவும் அசைவுறுகின்றது. ஆனால் கிளைக ளெல்லாம் கோடரியால் தறிக்கப் பட்டுப்போய்த் தனித்தபொழுது அது சலன மின்றி நிற்கின்றது. அது போன்று பெண்டு, பிள்ளை, பந்து, மித்திரர் முதலிய சகல விஷயங்களிலும் ஆசை வைத்து அவைகளைத் தாங்கி நிற் கும் மாந்தர் மாயை என்னும் காற்றினால் மோதப்பட்டு, சதா சலித்துக் கொண் டிருக்கிறார்கள். ஆனால் அவ் விஷ யங்களோடுள்ள பற்றுக்க ளெல்லாம் ஞானத்தினாற் சேதிக்கப்பட்ட காலத்தில் அவர்களே நிச்சலனமா யிருக்கிறார்கள்.

***

ஓர் கூத்தாடி யானவன் நெடிய கம்பத்தி னுச்சியில் நின்று அநேக விநோதமான வித்தைகளைக் காட்டுகிறான். அப்பொழுது அவனுடைய சாதுரியத்தைக் கண்டு அநேகர் மெச்சுகிறார்க ளாயினும் அவன் கம்பத்தி னுச்சியில் நிற் கும்வரை அவனுக்கு வெகுமதி யாகின்ற பலம் கிடைக்கிற தில்லை. அது போலவே அகங்காரத்தி னுச்சியில் நின்று கொண்டு வேண்டியவாறு ஞானப் பிரசங்கம்செய்யு மொரு வனை, பலபேர் மெச்சினும் அவன் அகங்காரத்தின் முகட் டில் நிற்கும் வரை அவனுக்கு மோக்ஷ பலம் சித்திக்கிற தில்லை.

கோட்டை வேளாளர்

ஸ்ரீமான் **T.** பொன்னம்பலம்பிள்ளை யவர்கள், **M. R. A. S.**

திருநெல்வேலி ஜில்லாவிலே தாம்பிரவர்ணிக் கரையிலே, இடம் பெற்றிருக்கும் ஸ்ரீவைகுண்டம் என்னும் பட்டினத்தைப் பற்றிக் கேட்டிராதார் தமிழகத்து மிகச் சிலரே யாவர். இப்பட்டினம் ஸ்ரீவைகுண்டம் தாலூகாவின் தலைநகரா யுள்ளது. அதன் பண்டையப் பெயர் திருவழுதி வளநாடு. இங்கே வெகு காலத்துக்கு முன் எழுப்பப் பெற்ற மண்கோட்டை ஒன்றுளது. அக் கோட்டைக்குள் தமிழர்களான ஒரு வேளாளக் கூட்டத்தார் வாழ்ந்து வருகின்றனர். கோட்டைக்குள் வாழ்ந்துவருதல் பற்றி அன்னோர் கோட்டை வேளாளர் எனப்படுவர். கோட்டையின் உள்ளடங்கிய நிலம் சுமார் 20 ஏக்கர் என்ப. இந்நிலத்தின் வேலியாய் எழுப்பப் பெற்ற மண்சுவர்களைப் பழுது பார்ப்பதற்கு இப்பொழுது துரைத்தனத்தார் ஆண்டாண்டு தோறும் 150 ரூபா செல வழிக்கின்றனர். அக்கோட்டைக்கு நான்கு வாயில்களுள. அவற்றுள் இரண்டு, விசேட தினங்களில் மட்டும் திறக்கப்படுவன. வழக்கத்தி லிருக்கும் வாயில் இரண்டும் இரவு 11 மணிக்கு மூடப்பெற்று காலை 5 மணிக்குத் திறக்கப்படுகின்றன. இக்கோட்டை வேளாளர் தனித் தனியான வீடுகளில் தங்குகின்றனர். அச்சாதி மாதர் அக் கோட்டையினின்றும் ஒருபோதும் வெளிக் கிளம்புவது மில்லை. உந்த நிலை மகம்மதியச் சீமாட்டிகளை யொப்ப ஆண்பாலார் கண்ணுக்குப் புலனாவது மில்லை. அடுத்த சுற்றத்தாரையும் அவர்கள் காண்டல் அருமை. அச்சாதிப் பெண்கள் மணமானபின்னும், மலைநாட்டுப் பெண்களைப்போல் தந்தையகத்துத் தங்கியிருப்பர். ஒரு தந்தைக்குப் பல புதல்விகள் இருக்க நேர்ந்தால் வீட்டின் உரிமை இளைய மகளுக்கே. மணநாள் முதல் தன் தந்தையின் (தாயின் என்பதே சாலும்) இல்லத்துத் தங்கிவரும் மகள் தன் இளையாளுக்கு மண மான வுடன், தன் தந்தையால் கட்டுவித்த வேறொரு மனையில் குடிப் புகுவாள். இவ்வாறு கடைக்குட்டி மகளுக்கு மணமுடியும் வரை நிகழ்வதனால், இறுதியி லவளே குடும்ப வீட்டுக்குத் தலைவி ஆகின்றாள். பெண்களுக்கு ஸ்திரீதனம் கொடுக்கப்பட்டதுபோக மீதமாவதெல்லாம் புதல்வர் உடமை யாகின்றன.

கோட்டை வேளாளர்

இக்கோட்டைக்குளே அன்னியர் எக்காரணத்தினுலும் போதல் கூடாது. காலப் பழக்கத்தால் அதன் வெளியில் வசிக்கும் மற்றை யோரும் இவ்வேற்பாட்டை ஒப்புக்கொண்டு, அதனுள் அன்னியர் புகுதல் பாபமும் பழியு முடைத்தென்று நம்பு கின்றனர். பிறப்பு முதல் இறப்பு வரை, பெண்கள் கோட்டைக்கு வெளியே ஒரு பொழுதும் செல்வதில்லை. இறந்த வுடன் பெண்களின் பிணத்தைக் கட்டியான துணியால் தைத்த பையில் செவ்வையாய்ப் பொதிந்து மூடி வடகீழ்வாயில் வழியாய் வெளி மயானத்துக்குக் கொண்டு போவார்கள். பொதுவாக அடைக்கப் பெற்றிருக்கும் வாயில்களில் இவ் வடகீழ்வாயிலும் ஒன்று. அது இத்தகைய தருணங்களிலே திறக்கப்படும். கோட்டை ஆடவர் அதற்குள்ளும் அவரவர் வீட்டுக் குள் மட்டும் போகலாமே யன்றி எல்லா வீட்டினுள்ளும் போதல் கூடாது. கோட்டைக்குள் போதற்கு உரிமையு டைய மற்றையோர் பரம்பரை வேலைக்காரர்களும் புரோகிதருமேயாம். ஆனுல் அவர்க ளும் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையுமே போகலாம். பரம்பரை வேலைக் காரிகளுக்கு மாதர்க ளிருக்கும் எல்லா இடங்களுக்கும் போக உரிமையுண்டு.

இவர்களின் உற்பத்தி—இவர்கள் சுமார் 1,000 வருடங்களுக்கு முன் மதுரை ஜில்லாவி லிருந்து வந்தவர்களாம். அவர்கள் கையிருப் புப் பிரமாணங்களினுல், அவர்கள் பாண்டிய ராஜனிடத்துப் பரம் பரை யாகவே அமைச்சர்களாகவும் பண்டாரிகளாகவும் இருந்தன ரென்று அறியலாகும். இவையன்றி, அரசர்களுக்குப் பட்டங் கட்டி முடிசூட்டும் தொழிலையும் அவர்கள் நடத்தி வந்தார்களாம். நாம் சுட்டிப் பேசும் அக்காலத்தில் மதுரையில் ஒரு பாண்டியனும், தூத் துக்குடிக் கருகே கொற்கையில் ஒரு பாண்டியனும் அரசாண் டிருந்த னர். இக்கோட்டை வேளாளரின் மூதாதையர் மதுரைக்கு வெகு தூரத்திலும் இராமேசுவரத்துக்கு அண்டையிலும் இருந்த செழுகை மாவில் குடியிருந்தார்களாம். மதுரையை ஆண்டிருந்த தென்ன வராயன் என்னும் பாண்டியனுக்கு ஒரு சொந்த மகனும் ஒரு வைப் பாட்டி மகனும் இருந்தார்களாம். தென்னவ ராயன் தன் வைப்பாட் டிமகனுக்குப் பட்டம் கட்ட எண்ணவே, கோட்டை வேளாளரின் மூதாதையர் அரசனது இத் தீச்செயலை மறுத்தது மன்றி, அவ் வைப்

பாட்டி மகனுக்கு முடி சூட்டித் தங்கள் குலப் பெருமையை இழக் கோமென்றும் கூறினார்கள். இதனால் கோபம் கொண்ட பாண்டி மன்னன் அவர்களைப் பலவாறு வருத்தினான். வருத்தியும் அவர்கள் அவனது வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. இறுதியில் அவர்களது மாதர்களை மானபங்கம் செய்தால் தன் எண்ணம் கைகூடு மென் றெண்ணி அத்தீச் செயலுக்கும் பாண்டியன் முற்பட்டான். ஆனால் உத்தமிகளான மாதர்கள் கற்பிழந்து உயிர் தரித்தலினும் கனலிற் புகுதலே நலமெனத் துணிந்து யாவரும் ஒரு கூட்டமாய்க் கூடி பேரெரி வளர்த்து அவர்களில் மிகுதியானவர்களும், ஆண்பாலாரிற் சிலரும் பாய்ந் திறந்தனர். இக்கொடுமையைக் கேள்வியுற்ற கொற்கை வேந்தனான பராக்கிரம பாண்டியன், தாம்பிரவர்ணிக் கரையிலுள்ள வழுதிவளநாட்டில் அவர்களுக்கு வாழ இடங்கொடுப்பதாய்த் தூது விடுத்தான். அவர்களும் அரசனது விருப்பத்துக்கிணங்கி வழுதிவள நாட்டிற்குப் பிரயாண மாயினர். அக்காலத்து உள் வேலைக்காரரும், உள்வேலைக்காரிகளும், உழவர் வேதியர் உள்ளிட்ட ஐவகை ஊழியர் களும் அவர்களோடு சென்றனர். அரசன் அனுமதி யின்றி அவர்கள் பிரயாணஞ் செய்ய நேர்ந்தமையின் அவர்கள் அடைந்த துன்பங்கள் அளவில்லாதன. அரசன் ஆணைக்கு அஞ்சி இராப் பொழுது பிரயா ணம் செய்வதும், பகற்காலத்து, முன் சென்ற தங்கள் வேலைக்காரர் கள் இயற்றிய முள் வேலிகளால் சூழப் பெற்ற ஒதுக்கிடங்களில் தங்குவது மாகப் பிரயாணம் செய்தார்கள். அவ்வாறு பகற் பொழுது தங்கும் ஒதுக்கிடங்களில் உள்ளொரு வரியும் வெளி யொரு வரியுமாக இருவகைக் காவலாளர் அவர்களைச் சூழ்ந்து காவல் செய்தார்களாம். உள்வரிக் காவலாளர் போர்த் திறமை வாய்ந்த பெண்களும், வெளி வரிக் காவலாளர் தோள்வலி மிக்க வீரர்களும் ஆவர். அவர்கள் வழுதிவள நாட்டை அடையு முன்னரே, கொற்கைவேந்தன் ஸ்ரீவை குண்டத்துக் காடுகளை எல்லாம் வெட்டி வெளியாக்கி, இருபது ஏக்கர் நிலத்தைச் சுற்றி மண்சுவர் எடுப்பித்து, 300 வீடுகள் எல்லா வசதிகளோடும் கட்டி முடிப்பித்தான். இவை கூடாமல் கிணறுகள், தோட்டங்கள், வயல்கள், ஆலயம், சத்திரம், முதலியனவும் ஏற் படுத்தப்பட்டன.[7] அன்றியும் அரசனே தன் கண் பார்வையில் அவர் களை ஆங்கு குடி யேற்றுவித்தான். உள்வேலைக்காரர் வீட்டுப் பெண்களாகவே இருந்ததனா லவர்களுக்கும் கோட்டையின் தென்

கிழக்கு மூலையில் வீடுகள் கொடுக்கப் பெற்றன. ஆனால் பிற் காலத்தில் அவர்கள் செய்த சில இடை யூறுகளால் அவர்கள் அவ்விடத்தினின்று புறக்கணிக்கப் பெற்று கோட்டைக்கு வெளியே இடம் பெற லாயினர். பிராமணப் புரோகிதர் களுக்கும் மற்றும் ஐவகை ஊழியக் காரர்களுக்கும் கோட்டைக்கு வெளியே இடம் கொடுக்கப் பட்டது. இக்கோட்டை வேளாளர் முதன் முதல் ஸ்ரீவைகுண்டத்துக் குடிப் புகுந்தது கொல்லமாண்டு 97-க்குக் சரியான சித்திர பானு௵ சித்திரை௴ 7௳ கிருஷ்ண பக்ஷத்து சப்தமியும் ரிஷப லக்கினத்துப் புனர்பூசமும் கூடிய சுபதினத்திலாம்.

ஆகவே ஏறத் தாழ 1000 வருஷங்களுக்கு முன் இவர்கள் இம்மண் கோட்டைக்குள் குடிப்புகுந்தனர். அக்காலத்து அவர்கள் குடியேறின நாட்டில் அரசாட்சியே இல்லா திருந்தது. பாண்டியரின் ஆளுகை முடிவுபெற்று நாயக்கர் ஆளுகை தொடங்கிய அக்காலத்து அந்நாட்டின் அரசாங்க முறை உறுதியற்றதா யிருந்தது. 13வது நூற்றாண்டில் பெலாலத் தலைவர்களின் கீழி லுள்ள மைசூர்ப் படைகளுக்கும் பாண்டியன் சேனைகளுக்கும் ஓயாச் சண்டையும் சச்சரவுமாக இருந்த தாகக் கிராமப் பாட்டுகளால் அறியக் கிடக்கின்றது. ஐதர் ஆலி, திப்பு சுல்த்தான் இவர்களுடைய வெறிகொண்ட படைகளும் பாளயப்பட்டார் சேனைகளும் செய்த கொடுமைகள் பற்பல. இத்தகைய துன்பங்கள் தங்களைச் சூழ்ந்து வெருட்டிய காலத்தும் இக்கோட்டை வேளாளர் தம்வழியே யேகி வாழ்ந்திருந்தனர். அதன் காரணத்தை அறியவேண்டியது அவசியமில்லை. அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் வந்ததுமுதல் நாளிதுவரையிலும் ஏவரோடும் ஒட்டாது ஒதுங்கி இருக்கின்றனர். இதன் காரணம்.

முதலாவதாக அரச ஆணைக் கடங்கி நடப்பதே அவர்களது முக்கியமான கொள்கை. இரண்டாவது கோட்டைக்கு வெளியே அவர்களுக்கு நிலம் முதலியன இருந்தாலும் அவ் விடத்திலுள்ள வேறு விஷயங்களில் அவர்கள் தலை இடுவதில்லை. மூன்றாவது கோட்டைக்கு வெளியே பல மாற்றங்களை உண்டுபண்ணின நாகரீகம் அவர்களைச் சிறிதும் அண்டவே இல்லை. அவர்களுடைய மூதாதையர் உடுத்தது போலவே அவர்கள் இப்பொழுதும் உடுக்கிறார்கள். அவர்களது பெண்களும் பண்டைக்கால வழக்கப் படியே இப் பொழுதும்

அணிந்து கொள்கிறார்கள். அவர்களுள் முதியோர் தங்கள் தலையை முழு மொட்டையிட்டுக் கொள்வது மன்றி, பூர்வீகர்களைப் போலவே காதுகளில் பெரிய வட்டக் கடுக்கன்களும் அணி கின்றனர். அற்ப சொற்பம் தாய்மொழியான தமிழ் பயில் கின்றார்கள். மேனாட்டுப் பாஷைகள் கற்க அவர்கள் தீவிர முயற்சிகள் செய்வ தில்லை. நான்காவது அவர்கள் ஆரத உணவே உட்கொள்ளு கிறார்கள். ஆகையால் வீரத்தன்மை அவர்களிடத் தில்லை. ஐந்தாவது அவர்கள் மணவினை செய்வதில் மிகக் கட்டுப்பா டுடையவர்களாய் இருக்கிறார்கள். இங்குக் குடிப்புகுந்த 300 குடும்பத்திலும் ஆதியில் 1,500 பேர் இருந்தன ராயினும், தற்காலத்தில் பாலர் முதல் விருத்தர் ஈறாக 150 பேர் மட்டுமே இருக்கின்றனர். என்றாலும் கோட்டைக்கு வெளியில் அவர்கள் பெண் கொள்வதே இல்லை. கோட்டைக்குள் பெண் அகப்படாதாயின் விவாக மின்றியே இருக்கின்றனர். கல்யாணம் செய்யாத புருஷர் பொதுவாய் நன்னெறியுடையவரா யிருக்கின்றனர். பெண்கள் தொகையிலும் ஆண்கள் தொகை மிகுந் திருக்கின்றதனால் விவாகமின்றி இருக்கும் பெண்களே இல்லை.

ஆறாவதாக வேலையாளரும், புரோகிதரும், செலுகையி லிருந்து வந்த மூதாதைய ரோடு வந்தவர்களின் சந்ததியா ராகவே இருப்பதால் தங்கள் எஜமான்க ளிடத்து நம்பிக்கையும் பற்றுக்கோடும் உடையரா யிருக்கிறார்கள். 1833-வது வருஷத்தில் அவர்கள் சுவாதீனம் பெற்றதன் முன், அடிமைகள்போல் நடத்தப்பட்டு வந்தன ராயினும் அவர்களது தற்கால நிலைமை மிக சமத்துவ முடையதென்றே சொல்லலாம். வேலையாட்கள் ஏராளமான கூலிபெறுவதோடு, அவர்களது பல தேவைகளும் எஜமான்களால் பூர்த்தி செய்யப் படுகின்றன.

மேலே கூறியவற்றால் இக்கோட்டை வேளாளர் அன்னியர் காரியங்களில் புகாது பற்றற்றவர் போன்று வாழும் ஜாதியாரென்று உணர்ந்து கொள்ள முடியும். அவர்கள் மிகவும் ராஜபக்தி யுள்ளவர்களாயு மிருக்கின்றனர். அப் பிரதேசங்களில் கவர்னர் (மாகாணத் தலைவர்) எழுந்தருளுங் காலத்து அவர்களுக்கு நல்வரவு கூறும் கூட்டத்தில் தலைமை வகிப்போர் இவர்களேயாம். பொதுக் கூட்டங்

களில் பெரியோர்களுக்கு மாலை அணியும் உரிமையும் இவர்களுடையதே. பென்ற்லன்று பிரபு (Lord Pentland) அவ்விடம் விஜயம் செய்த காலத்தில் அவர்களது ராஜ விசுவாசத்தையும் குணப்பெருமைகளையும் உணர்ந்து பெரிதும் வியந்து அவர்களது கோட்டையின் புறப் பாகத்தைப் பிரதட்சணம் செய்து பார்த்து அவர்களைக் கௌரவப் படுத்தினராம்.

எப்பொழுதும் தனிமையாய் வாழ விரும்பும் இப் புராதன ஜாதியாருக்குக் குறை பாடுகள் பல இல்லாது மில்லை. அவர்கள் சீமான்கள் அல்லா விடினும் அவர்களுள் ஒவ்வொரு வரும் வறுமை யின்றி நாட் கழிக்கச் சக்தி யுடையவ னாகவே இருக்கிறான். ஆகையால் அவர்கள் பரிசுத்தமான சுக ஜீவிதம் செய்யும் நிலைமையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களது இந்நன் னிலைமையைக் கண்டு பொறாமை யுறும் அயலார் அவர்களுக்குப் பலபொழுதும் பல இடையூறுகளைச் செய்து வருகின்றன ராயினும், அதிகாரிகளிடத்துக் குறை கூறும் வழக்கத்தைக் கோட்டை வேளாளர் இதுகாறும் கைக் கொள்ளவே இல்லை. காரணம் அவர்களுக்கு வல்லடி வழக்காடுவதில் விருப்ப மில்லாமையே.

உ

மூத்தபிள்ளையார்.

சங்கரனார் பெற்றபிள்ளை சங்கரிக்கு மூத்தபிள்ளை
மங்குலவண்ண* னுக்குகந்த மாப்பிள்ளை—பொங்கியெழும்
அப்பம்வடை தோசையென்றால் ஆசைப் படும்பிள்ளை
இப்பிள்ளை யார்சொல் எனக்கு.

* திருமால்

வ. வே.

வெண்பா.

தந்தை மலையாளி தாய் மாமன் ஆட்டிடையன்
வந்தவொரு மச்சானும் வாணியனே—சந்ததமும்
விண்முத்தை எட்டும் அயில் வேலேந்து பன்னிருகைச்
சண்முகற்குச் சாதியெது தான்.

கடிகாரம்

ஸ்ரீமான் S. தேசிக விநாயகம் பிள்ளை எழுதியது.

(கடிகாரம் வாங்கித் தரும்படி கேட்டுக் கொண்ட தன் மகளிடம் ஏழையான ஒரு தாய் "மகளே! நேரத்தை அறிவதற்கு இயற்கையில் தானே அநேக லக்ஷியங்களிருக்க நமக்கு வேறு கடிகாரமும் வேண்டுமோ?" எனக்கூறுகின்றாள்.)

சேவற் கோழியுண்டு, காகமுண்டு, வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு,
மேவு பொன்னே! அதிகாலை தெரிந்திட
வேறும் கடிகாரம் வேண்டு மோடி? (1)

செங்கதிர் பொங்கி வருவதுண்டு, நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு,
மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி? (2)

தன்னிழல் தன்னடி யாவதுண்டு, சுடர்
தானுந் தலைநேர் எழுவதுண்டு,
இன்னமுதே! பக லுச்சி யிதென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி? (3)

விண்மணி யாழியில் வீழ்வதுண்டு, வாசம்
வீசு மந்தாரை மலர்வதுண்டு,
கண்மணியே! மாலைக் காலம் குறித்திடக்
கையில் கடிகாரம் வேண்டுமோடி? (4)

முல்லை யரும்பு விரிவதுண் டாம்பலின்
மொட்டுசெள் மெல்ல அவிழ்வதுண்டு,
மெல்லியலே! மாலை வேளையறிந்திட
வெள்ளிக் கடிகாரம் வேண்டுமோடி? (5)

அம்புலி நக்ஷத் திரங்களுண்டு, கணக்
காக்கி யறிய வழிகளுண்டு,
இம்ப ரமுதே! ராநேர மறிந்திட
இன்னும் கடிகாரம் வேண்டுமோடி? (6)

கம்மென வாசம் கமழ்பாரி சாதமிக்
காவில் மலர்ந்து சொரிவதுண்டு,
அம்மையே! நள்ளிர வீதென்று சொல்லிட
ஆர்க்கும் கடிகாரம் வேண்டுமோடி? (7)

காலைமாலை எந்த வேளையும் சூரிய
காந்தி மலர்தானே காட்டிடாதோ?
வேலை யெழுந்த திருவே! உனக்கினி
மேலும் கடிகாரம் வேண்டுமோடி? (8)

சுற்றுப் பொருளெல்லாம் உற்று நோக்கியவை
சுட்டும் மணிநேரம் கண்டறிவாய்,
பெற்ற முத்தே! யிந்த உண்மைய றிவோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி? (9)



மஹாத்மா காந்தி.

நினையாத பாக்கியம்

ஸ்ரீமான் பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

"ஐயா! தங்களுக்கு எந்த ஊர்? வாடி இளைத்திருக்கிறீர்களே."

"எனக்கா? வடக்கே கோவிற் கோட்டை. ஒருநாள் ஒரு நேரங்கூட உண்பது சந்தேகமா யிருந்தால் உடம்பு வாடி இளைக்காதா?"

"ஐயோ கஷ்டம்! ஒரு வார்த்தை கேட்பீர்களானால் உங்கள் துன்பமெல்லாம் நீங்கும். சம்மதந் தானா? சீக்கிரம் சொல்லுங்கள்."

"இது என்ன வேடிக்கை! நீர் யார்? நீர் சொல்லப் போகிறது என்ன வார்த்தை? நான் ஏன் கேட்க வேண்டும்?"

"எல்லாம் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் இந்த ஊர் (திருநெல்வேலி) கு. மா. த. கடைக் கணக்கு சண்முகம்பிள்ளை. பாளையங் கோட்டையில் ஒரு பெண் இருக்கிறது. அந்தப் பெண்ணை நான் கேட்டுப் பொருத்தம் பார்த்து நிச்சய தாம்பூலம் ஆகும் சமயத்தில் வேறொரு மாப்பிள்ளைத் தரம் வந்தது. அந்த மாப்பிள்ளை என்னைவிடப் பணக்காரன் ஆகையால் பெண் வீட்டார் அவன் பக்கம் சாய்ந் திருக்கிறார்கள். நானும் பணக்காரன் என்று அறிந்தால் அந்தப் பெண் எனக்குக் கிடைக்கும். நிச்சய தாம்பூலம் ஆகும் தருணத்தில் இந்தப் பெண்ணை இழப்ப தென்றால் வருத்த மாகவும் அவமானமாகவும் இருக்கிறது. ஆதலால் அந்தப் பெண்ணை எப்படியாவது விவாகம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்து விட்டேன். எனக்கு ஒரு தாய் மாமனார் இருந்தார். அவர் கொளும்புக்குப் போய் வெகு காலம் ஆய் விட்டது. நீங்கள் கொளும்பி லிருந்து வந்த தாய் மாமன் ஆக வேண்டும். நீங்கள் கொளும்பில் பெரிய வர்த்தகர். சுமார் ஒருலட்சம் ரூபா பாங்கில் கிடக்கிறது. வியாபாரத்திலும் ஒரு லட்சத்துக்கு மேல் முடக்கி யிருக்கிறீர்கள். உங்களுக்கு வாரீசில்லாத

திலுல் எனக்குத்தான் அவ்வளவையும் தர உத்தேசித் திருக்கிறீர் கள். இவ்வளவும் நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.''

"சரி. சரி! அப்படியே நான் ஒப்புக்கொண்டதாக வைத்துக் கொள்வோம். இந்தப் புளுகெல்லாம் எத்தனை நாளைக்கு நிலை நிற் கும். கடைசியில் வெளியானல்?''

கலியாணம் முடிந்ததும் கொளும்பி லிருந்து தந்தி வந்த தாய்ப் பிரஸ்தாபம் உண்டாக்கி மறைந்து விடுங்கள். பிறகு பாங்கு உடைந்து விட்டது. வியாபாரத்தில் நஷ்ட முண்டாயிற்று; மாமனர் தூங்கி இறந்து விட்டார் என்றெல்லாம் கூறிச் சமாளித்து விடு கிறேன். தாலி கழுத்திலேறின பிற்பாடு வேறு யோசனை என்ன!

"பலே! பலே!! நீர் பெரிய புத்திசாலிதான். ஆனல் நான் பணக்கார மாம ஞரானல் அதற்குத் தக்கபடி யெல்லாம் நடக்க வேண்டுமே. என் கையில் ஒரு துட்டுக் கூட இல்லையே.''

"அதெல்லாம் நான் சரிப் படுத்தி விடுகிறேன். இதோ வாங்குங் கள் 4 அணு! அதோ நிற்கிற அம்பட்ட னண்டை சென்று க்ஷௌரம் செய்து ஸ்நானம் முடித்து வாருங்கள். மற்றக் காரியங்கள் எல்லாம் என் பொறுப்பு'' என்றுர் சண்முகம்பிள்ளை.

வந்தவர் என்ன செய்கிற தென்று ஆலோசித்தார். அன்றையச் சாப்பாட்டுக்குக் கூட அவரிடம் துட்டில்லை. சண்முகம் பிள்ளை அவரைப் பணக்கார வேஷம் போடச் சொல்லுகிருர். மேலும் கீழும் பார்த்தார். சண்முகம்பிள்ளை முகத்தை உற்று நோக்கினர்; ஆலிலை போல் வாடி யிருக்கும் தன் வயிற்றைப் பார்த்துப் பெரு மூச்சு விட்டார். சண்முகம்பிள்ளை வேண்டுகோளுக்கு இசைந்தார்.

வந்தவர் க்ஷௌரம்செய்து ஸ்நானம்முடித்து, சண்முகம்பிள்ளை கொடுத்த வேஷ்டி, ஷர்ட்டு, கோட்டு அங்கவஸ்திரம் முதலியன அணிந்து புதுமாப்பிள்ளை போலானர்.

இவ்வளவும் தாம்பிரவர்ணியில் சுலோசன முதலியார் பாலத் தின் கீழ் நடந்தது.

இருவரும் மேலே ரோட்டில் வந்து ஒரு ஜட்காவி லேறி திரு நெல்வேலி டௌணுக்குப் புறப்பட்டார்கள். வண்டி ரெயிலடியை

அடைய வண்டியை நிறுத்தும்படி வந்தவர் சொன்னார். வண்டியும் நின்றது.

"கொழும்பு வியாபாரி யானால் சேப்பில் பண மில்லாம லிருக்க லாமா? நேர்த்தியான ஒரு மணிபாக்ஸ் வேண்டும். வெளியி லிறங்க வேண்டுமானால் இந்த ஊர் வெயிலில் எப்படிக் குடை இல்லா மல் நடக்கிறது? காலுக்குப் பாதரட்சையு மில்லை" என்றார் வந்தவர்.

சண்முகம்பிள்ளை உடனே கலியாணி பிரஸ் ஷாப்பில் சென்று ஒரு மணி பாக்ஸ், ஒரு குடை, பாதரட்சை முதலியன வாங்கிக் கொடுத்தார்.

வந்தவர் அவைகளைப் பெற்றுக்கொண்டு "மணிபாக்ஸ் வெறுமை யா யிருக்கலாமா. பத்து ரூபாச் சில்லறை யாவது வேண்டாமா?" என்று சொல்ல, சண்முகம்பிள்ளை மறுபேச்சுப் பேசாமல் 10 ரூபா கொடுத்தார். இருவரும் வண்டியிலேறி தெற்குப் புதுத்தெரு சண் முகம்பிள்ளை வீட்டில் சென்று இறங்கினார்கள்.

சண்முகம்பிள்ளை தாயாருக்கு வயது எழுபதுக்கு மேலா யிற்று. நயன சூட்சம் சொற்பம் குறைவு.

"அம்மா! கொழும்புக்குப் போயிருந்த அம்மான் வந்துவிட் டார்கள். அவர்கள் வருவதாக எனக்கு இரண்டு வாரத்துக்கு முன்னமேயே காகிதம் வந்தது. நான் அதை நம்பவில்லை. அவர் கள் என்கடையை எப்படியோ தேடிப் பிடித்து என்னைக் கண்டு கண் ணீர் விட்டு அழுதார்கள். முப்பது வருஷமாய்க் காணம லிருந்த உன் தம்பி இதோ வந்துவிட்டார்" என்று சண்முகம்பிள்ளை அழுத்தம் திருத்தமாய்ப் பேசி முடித்தார்.

நயன சூட்ச மில்லாத ஏழைக் கிழவியும் தம்பியைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். பழங்கதை யெல்லாம் சொல்லிப் புலம்பினாள்.

சண்முகம்பிள்ளையின் புது மாமனுக்கு வயது 40-45-க்கு மேல் இராது. உடம்பு வாடி இருந்தாலும் நாலைந்து நாளத்திய விருந்துச் சாப்பாட்டினால் தெளி வடைந்து விட்டது. இயல்பாகவே அவர் அந்த சந்தமான உருவ முடையவர். அத்துடன் உடைமினுக் கும் சேர அவர் ஒரு உண்மைச் சீமானாகவே தோன்றினார்.

210334

தன்னைப் பார்க்க வந்தவர்கள் இடமெல்லாம் போலி மாமனார் கொளும்பு வியாபாரத்தைப் பற்றிப் பேசினார். தன் ஆஸ்தி முழுவதை யும் சண்முகம்பிள்ளைக்குக் கொடுக்க உத்தேசித் திருப்பதையும் ஒரு ஜாடையாகச் சொல்லி வைத்தார்.

இந்த சமாசாரங்களெல்லாம் ஊரில் பெரும் பேச்சாகி பாளையங் கோட்டைப் பெண் வீட்டிலும் எட்டிற்று.

ஏன் விரிக்கவேண்டும்? பெண்ணைச் சண்முகம்பிள்ளைக்குக் கொடுப்பதாகத் தீர்மான மாகி, அடுத்த மாதம் 5வ பரிசம் போட வும் 10வ முகூர்த்தம் நடத்தவும் ஏற்பாடா யிற்று.

பெண்ணுக்குத் தகப்பனா ரில்லை. தாய் மாமன் அம்பலத்தாடு வார் பிள்ளைதான் பெண் வீட்டுக்குத் தலைவர். அவர் தங்கையான பெண்ணின் தாயார் அவருடைய கைப் பாவை. அம்பலத்தாடுவார் பிள்ளையும் சண்முகம்பிள்ளை மாமனாரும் இணைபிரியாத் தோழர்கள் ஆய் விட்டார்கள். கொளும்பு மாமனாரும் தன் செல்வப் பெருக்கைப் பற்றி சதா அம்பலத்தாடுவார் பிள்ளையிடம் வர்ணித்துக்கொண்டே இருந்தார். அம்பலத்தாடுவார்பிள்ளை மதிமயங்கிப் போனார்.

ஒருநாள் அவர்கள் பேசிக்கொண் டிருக்கும்பொழுது கணபதி விலாஸம் நாடகக் கொட்டகையில் புதிதாய் நாடகமாட வந்திருக் கும் பாலாமணி நாடகக் கம்பனியார் ஆட்கள் தண்டோரா சகிதம் நாடக நோட்டிஸ் கொடுத்துக்கொண்டு போவதைப் பார்த்து அம்பலத்தாடுவார்பிள்ளை ஒரு நோட்டிஸ் வாங்கினார்.

“குலேபகாவலி சரித்திரமாமே! வெகு நேர்த்தியான நாட கம். நாம் இன்று போகவேண்டும்” என்று அம்பலத்தாடுவார் பிள்ளை போலி மாமனாரிடம் சொன்னார்.

“அதற்கென்ன! போகிறதுதானே” என்று மாமனாரும் தடை கூறாது சம்மதித்தார்.

“நாங்களும் கூட வரலாமா?” என்று கூட இருந்த வேறிரு வர் கேட்டார்கள்.

நினையாத பாக்கியம்,

"சரி வாருங்கள்" என்றார் மாமனார். அன்றிரவு நாடகத்துக்குப் போவதாக முடிவு செய்துகொண்டு அம்பலத்தாடுவார் பிள்ளையும் மற்ற இருவரும் போய் விட்டார்கள்.

சற்றுப் பொறுத்து வெளியில் போயிருந்த சண்முகம்பிள்ளை வந்தார்.

"இன்று கணபதி விலாசத்தில் குலேபக்காவலி நாடகமாம். அம்பலத்தாடுவார் பிள்ளை போக வேண்டுமென்று கட்டாயப் படுத்துகிறான். தெற்குவீட்டு சுப்புபிள்ளையும் வடக்கு வீட்டு குப்பான் பிள்ளையும் கூட வருகிறோம் என்கிறார்கள். மூவரையும் அழைத்துக் கொண்டு போவதாகச் சம்மதித்து விட்டேன். என் ஸ்திதிக்கு மறுப்பதும் நியாய மல்லவே" என்று மாமனார் சண்முகம்பிள்ளை யிடம் சொன்னார்.

"வினையை விலைகொடுத்து வாங்கினதுபோ லாயிற்றே. இருக்கட்டும். இதோ இரண்டு ரூபா! நான்கு பேரும் பெஞ்சு டிக்கற்று வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சண்முகம்பிள்ளை இரண்டு ரூபாவை நீட்டினார்.

"அப்பா! எல்லாம் தெரிந்திருந்தும் தெரியாதவன் போல் பேசுகிறாய். லட்சப் பிரபு பெஞ்சில் உட்காரலாமா? நான் மட்டும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவர்களை பெஞ்சில் உட்கார்த்தலாமா? அதுவும் மரியாதை யல்ல. உனக்குப் பணம் செலவாகிறதே என்று வருத்தமாக இருக்கிறது, நானோ நீ என் தலை மேலேற்றிய அந்தஸ்தைக் காப்பாற்ற வேண்டிய வனாக இருக்கிறேன். இல்லாவிட்டால் உனக்குத் தான் கேடு" என்றார் மாமனார்.

என்ன செய்வார் சண்முகம்பிள்ளை!

"சரி! உம்மைச் சொல்லக் குற்ற மில்லை. எத்தனை ரூபா வேண்டும், சொல்லித் தொலையும்" என்றார்.

"முதல் வகுப்பு நாற்காலிக்கு 1-8 ஆம். ஆகவே 6 ரூபா வேண்டும்" என்றார் மாமனார்.

சண்முகம்பிள்ளை பெரு மூச்செறிந்து கொண்டு 6 ரூபா கொடுத்து "இன்னும் பரிசம் போட 4 நாள் இருக்கிறது. அதற்குள் மேலும் வீண் செலவை இழுத்துக் கொள்ளாதேயும். உம்

முடைய பணக்கார நாடகத்தை நீர் பூராவாக ஆடத் தொடங்கி விட்டால் நான் தாங்க மாட்டேன்" என்றார்.

"அப்பா! எய்தாரை நோவாமல் அம்பை நோவலாமா? உனக்கு வீண்செலவை உண்டாக்க எனக்குப் பிரியமில்லை தான். வேண்டு மானால் நான் இன்றே மறைந்து விடுகிறேன். உன் பாட்டை நீபார்" என்றார் மாமனார்.

"குறைக் கூத்தும் ஆடாமல் விடுகிறதா? தயவு செய்து கொஞ்சம் ஜாக்கிரதையா யிருங்கள்" என்று கூறிவிட்டு, சண்முகம் பிள்ளை போக எத்தனித்தார்.

"அப்பா! நில்? உனக்கு உலகப் பழக்க மில்லைபோ லிருக் கிறது. நாடகக் கொட்டகையில் காப்பியோ சோடாவோ சாப்பிட வேண்டு மென்று அவர்கள் சொல்லிக் கொண்டால் பணக்காரனை நான் என்ன செய்வேன்? ஆகையால் அந்தச் செலவுக்கும் ஒரு ரூபா கூடக்கொடு" என்று மாமனார் மெதுவாகக் கேட்டார்.

சண்முகம் பிள்ளைக்கு உச்சிமுதல் உள்ளங்கால்வரை தீப்பற்றி எரிந்தது போல் இருந்தது. மாமனாரைப் பார்ப்பது யெமனைப் பார்த்தது போலாயிற்று.

ஒரு ரூபாவை வீசி யெறிந்து விட்டுப் போய் விட்டார்.

மாலை 7-மணிக்கு அம்பலத்தாடுவார் பிள்ளையும் அயல்வீட்டார் இருவரும் தவறாமல் வந்து சேர்ந்தார்கள். போலி மாமனாரும் அவர் களை அழைத்துக்கொண்டு நாடகக் கொட்டகைக்குச் சென்றார்.

மூன்றாம் தேதி ஆயிற்று. அன்றிரவு மாமனார் சண்முகம் பிள்ளையை அழைத்து "அப்பா! நீ மிகவும் புத்திசாலிதான். ஆனால் நீயும் நானும் ஒருபொழுதும் எதிர் பாராத ஒரு ஆபத்து வந் திருக்கிறது. அம்பலத்தாடுவார் பிள்ளை என்னை உண்மை யாகவே பணக்காரன் என்று நம்பி 200 ரூபா கடன் கேட்கிறான். லட்சப் பிரபுவான நான் இல்லை யென்ன லாமா? நாளைக் கொடுப்பதாக வாக்களித்து விட்டேன். காலை 8-மணிக்குள் தொகை எப்படியாவது என் கையில் வரவேண்டும். உனக்குப் பிரியம் இல்லாவிட்டால் இன் றிரவே நான் மறைந்து விடுகிறேன்" என்று பதமாகச் சொன்னார்.

நினையாத பாக்கியம்

புத்திசாலி சண்முகம்பிள்ளை பிணம் போலானான். பேச நாவெழ வில்லை. மேலும் கீழும் பார்த்துக் கொண்டு தூண்போல் நின்றான்.

மாமனார் :—“என்ன யோசனை ? நீ வைத்த கண்ணி உனக்கே விழுந்தது. பரிசம் போட நாளை ஒரு நாள் தான் இருக்கிறது. ரூபா இருநூறும் வரவில்லை யானால் பெண் தவறிவிடும். உன் இஷ்டப்படி செய். என்னைக் குறை கூறாதே.”

சண்முகம் :—“கள்ளனைக் கிள்ளன் திருடின கதையாக இருக்கிறது. இருக்கட்டும் ! தொடங்கின கூத்தை முழுதும் ஆடித் தீர்க்கிறேன். இனிமேல் ஒரு பைசாகூட கேட்க மாட்டேனென்று சத்தியம் செய்வீரா ?”

மாமனார் :—“என்னை ஏன் சந்தேகிக்கிறாய் ? நம்பிக்கை இல்லை யானால் இதோ நான் போகிறேன்” என்று எழுந்தார்.

சண்முகம்பிள்ளை அவரைப் பிடித்தமர்த்தி 200 ரூபாவுக்கு இரண்டு நோட்டு அப்பொழுதே கொடுத்து விட்டார்.

4உ மாலையாயிற்று. 5உ காலை 6-மணிக்குப் பரிசம்போட சுபமுகூர்த்தம். 5உ காலையில் திருநெல்வேலியி லிருந்து பாளையங் கோட்டைக்குப் போவது சாத்தியப்படா தென்றும், மணி 6 அடிக்கும்போது கட்டாயம் பரிசம் போட்டுத் தீரவேண்டு மென்றும், ஆகையால் 4உ இரவே பரிசத்துக்கு வேண்டிய சாமான்களோடு கலியாணச் செலவுக்குள்ள ரூபா 300-ம் கொண்டு மாப்பிள்ளைவீட்டார் பாளையங்கோட்டைக்குப் போகவேண்டுமென்றும் அம்பலத் தாடுவார் பிள்ளை கட்டாயப் படுத்தினார். அடுத்த வீட்டாரும் சம்மதித்தார்கள். ஆகவே 100 ரூபா விலையுள்ள ஒரு பட்டும் கலியாணச் செலவுக்கு 300 ரூபாவும் சண்முகம்பிள்ளை மாமனாரிடம் உடன் தானே கொடுக்கப் பட்டன. அவரைவிடச் சண்முகம்பிள்ளைக்கு நம்பிக்கையான ஆள் யாருண்டு? சண்முகம்பிள்ளை தன் சிநேகிதர் கள் இருவரைக் குடும்பசகிதம் அவர்களுடன் அனுப்பினார். அம்பலத்

தாடுவார் பிள்ளை யாவரையும் அழைத்துக் கொண்டு பாளையங்கோட்டைக்குப் போனார். போனதும் அறுசுவை யுண்டியுடன் யாவருக்கும் விருந்தளிக்கப் பட்டது. மறு நாள் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியதை உத்தேசித்து, மாப்பிள்ளை வீட்டாரின், ஜாகைக்காகத் தயார் செய்யப் பட்டிருந்த அடுத்த வீட்டில் மாப்பிள்ளை வீட்டார் தூங்கச் சென்றார்கள்.

மறுநாள் விடியற் காலம் 5-மணிக்கு, பாளையங்கோட்டைக்குப் பரிசம்போடச் சென்றிருந்த சண்முகம்பிள்ளை சிநேகிதர்கள் இருவரும், வியர்க்கத் துடிக்கத் தெற்குப் புதுத் தெருவுக்கு ஓடிவந்து சண்முகம்பிள்ளையை எழுப்பினார்கள். சண்முகம்பிள்ளை ஆவி தடுமாறிக் கதவைத்திறந்தான்.

"ஐயோ! முழுமோச மாய் விட்டது. நேற்றிரவு 1-மணிக்கு உன் மாமனாருக்கும் பெண்ணுக்கும் யாரும் அறியாமல் அடுக்களைத் தாலிகட்டிக் கலியாணம் நடந்து விட்டது. பாவி அம்பலத்தாடுவார் பிள்ளை எங்களை அடுத்தவீட்டில் தூங்க வைத்து வெளிக்கதவைப் பூட்டி விட்டான். அந்தத் தலைதெறிப்பான் உன் தோளி லிருந்தே செவியைக் கடித்து விட்டானே" என்று ஏக்கத்தோடு கதையைக் கூறி முடித்தார்கள்.

பணக்கார மாமனார் உதவியை மட்டும் நம்பி யிருக்கும் சண்முகம் பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுப்பதை விட, மாமனாருக்கே பெண்ணைக் கொடுத்து விட்டால் மாமனார் சொத்தை யெல்லாம் ஓராங் காணியாய் ஆளலாமே என்றெண்ணினார் அம்பலத்தாடுவார் பிள்ளை.

மாமனார் செம்பு மறுநாள் எட்டுமணிக்குள் துலங்கிற்று.

துலங்கினால் என்ன? கழுத்தில் கட்டின தாலி தாலிதானே?

அன்பு

(பண்டிதர் சி. வீரவாகுப் பிள்ளை அவர்கள் எழுதியது.)

அன்பு என்பது மக்கள் என்று சிறப்பித்துச் சொல்லும் அவருக்கு இன்றியமையாது இருக்க வேண்டும் ஒரு குணமாகும். ஒரு நந்தவனத்தில் சண்பகம், செருந்தி, முல்லை, இருள்வாசி, பிச்சி, வெட்சி, மந்தாரை முதலிய மணங் கமழும் பல நிறப் பூக்களும் நிரம்பி யிருந்தாலும், இனிப்பும் அழகும் நறிய மணமுமுள்ள ரோஜா ஒன்று இல்லையானால் அவ் வனத்தை எவ்வாறு நாம் புகழ்ந்து பேசுவது இல்லையோ அது போல ஒருவரிடத்தில் பல சம்பத்துக்களிருந்தாலும் அன்பு மட்டும் இல்லையானால் அவரை மதித்துரைப்பதும் இல்லை யாகும்.

அன்பானது வல்லென்றிருக்கும் நிலத்தை நன்றாக வெட்டி உழுது மெல்லி தாக்கி உணவுக்கு வேண்டும் செந்நெல், உழுந்து, துவரை, அவரை முதலிய பயிர்களைப் பயிரிட்டு வளர்த்துக் கொள்ளும் உழவனைப் போல, கல்லினும் வலிதாக இறுகி இருக்கும் மனத்தை நெகிழச் செய்து அருள், வாய்மை, அடக்கம், பிற வுயிர்களுக்குத் தீங்கு செய்யாமை முதலிய நற் குணங்களை வளரச் செய்கிறது.

இன்னும் இவ் வன்பு மக்கள் வாழ்க்கையில் முதலாக வுள்ளதும் சிறந்ததுமான மனைவியோடு கூடி வாழும் இல்லற வாழ்க்கைக்குத் தாயகமாக இருக்கிறது. இல்லறம் சரியாக நடப்பதற்கு வேண்டிய வீடு, வாசல், தோப்பு, துரவு, தட்டு முட்டு முதலிய வெல்லாம் ஒருவன் பெற்றிருந்தாலும் அவைகளை வைத்துக் கையாளும் தானும் தன் மனைவியும் நெகிழாத அன்பைப் பொருந்தி யிருந்தால் தான் அவ் வில் வாழ்க்கை நடைபெறும். அப்படிக் கில்லாமல் அவர்களிருவரும் மனக் கலப்பின்றி ஓயாமல் ஒருவரை ஒருவர் சினந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தால் இல்லிலிருந்து செய்யும்படி விதிக்கப்பட்ட தருமங்கள் பலவும் செய்ய முடியுமா? அச்சாணி யின்றி வண்டி ஓடுவதுண்டா? ஆகையால் எல்லா வகையாலும் மன

மலுத்து முடிவில் தாங்கள் செய்ய வேண்டும் அறங்களை யெல்லாம் கூட்டோடும் கை நெகிழவிட்டு இம்மையிலும் இன்பத்தை யிழந்து மறுமையிலும் துன்பப் படுகிறார்கள்.

கணவனும் மனைவியும் ஏழு அடுக்கிய மாளிகையிலே இருந்து விலை யேறப் பெற்ற வித விதமான பட்டுடை உடுத்தும், பணியை அணிந்தும், பாலொடு சோற்றைப் பொற் கிண்ணத்தில் உண்டும், பட்டில் தைத்த படுக்கையிலே குழலும் யாழும் கேட்டுக் கண் ணுறங்கியும் விழித்தும் வாழ்ந்தா ராயினும் அன்பு என்னும் ஒரு குணம் அவர்களிடத்து இல்லையாகு மானால் முழு மதியை இழந்து இருண்ட வானத்தைப் போல இன்ப மில்லாத வறிய வாழ்க்கையே வாழ்ந்தவ ராவார்கள். மண் சுவர் எடுத்துத் தென்னோலை வேய்ந்த குடிசையிலே காலையி லிருந்து மாலை வரையும் கையும் மெய்யும் சலிக்கும்படி உழைத்து அதனால் வந்தன கொண்டு கால் வயிறும் அரை வயிறு மாகக் கூழைக் குடித்துக் கந்தையைச் சுற்றிக் கையை அணையாக வைத்துத் தரையில் நித்திரை கொண்டெழும் ஏழை வாழ்க்கையை அவ் விருவரும் வாழ்ந்தா ராயினும் மனங் கலந்த அன்பு உடையவ ராயின் அவர்கள் தான் இம்மையிலும் மறுமையிலும் உண் மையான இன்பத்தைப் பெற்று இல் வாழ்க்கையின் பயனை அடை கிறார்கள்.

இற்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்குமுன் சோழ நாட் டிலே காவிரிப்பூம் பட்டினத்திலே கரிகாற் பெருவளத்தான் என்ற அரசன் அரசு புரிந்து வரும் பொழுது கடியலூரிலே உருத்திரங் கண்ணனார் என்ற ஒரு புலவர் தன் அன்புள்ள மனைவியோடு இல்லறம் நடத்தி வாழ்ந்து வந்தார். அவருக்கு வறுமை வந்து சேர்ந்தது. எறும்புக்குக் கூட ஒரு அரிசி அவர் வீட்டில் இல்லை. என்ன செய்வார் புலவர்? தானும் தன் மனைவியும் பட்டினியிருந்து பல நாள் வருந்தினார். பசிப் பிணி அவர்களைப் பெரிதும் அலைத் தது. உண வில்லாமல் எத்தனை நாள் இருக்க முடியும்? இனி உயிர் வாழ்வதும் முடியா தென்ற நிலைமை வந்து விட்டது. ஒரு நாள் அவர் தன் மனைவியை அருகில் அழைத்து "பெண்ணே! நாம் பசியால் எத்தனை நாள் வருந்துவது? காவிரிப்பூம் பட்டினத்திலே யிருக்கும் மன்னர் பெருமானாகிய கரிகாற் பெருவளத்தானிடத்துக்

குப் போய் நம்முடைய வறுமையைக் கூறிப் பொருள் வாங்கிக் கொண்டு விரைவில் வருகிறேன்: அது வரையும் என் பிரிவைப் பொறுத்திரு" என்றார். அது கேட்டதும் அவர் மனைவியார் தன் அன்புள்ள கணவர் பிரிவைச் சகியாதவராய் இடியொலி கேட்ட நாகம் போல நடுங்கிக் கண்களிலிருந்து நீரைச் சிந்தி அழகிய கண்ணாடியைப் போல வழுவழுப்பும் ஒளியும் உடைய கன்னத்தையும் ஆடையையும் நனைத்து அழுதார். அதைக் கண்ட புலவர் மனம் பதறி அவரைப் பல இனிய வசனங்களால் மகிழ்வித்து "அரசர் தான் ஆளும் வளமுள்ள பட்டினத்தையே எனக்கு முற்றூட்டாகத் தந்தாலும் நான் உன்னைப் பிரிந்து போவதில்லை" என்று தேனிலும், பாலிலும், தீங்கரும்பிலும் இனிக்கும் ஒரு பாட்டுப் பாடினார். அப் பாட்டுக்குத்தான் 'பட்டினப்பாலை' என்று பெயர். பாருங்கள்! பொல்லாத வறுமை கூட அன்புக்கு முன் தலை காட்டாது உடைந்து ஓடுமானால் அதன் பெருமையை யாரே எடுத்துரைக்க வல்லார். இத் தகைய அன்புடையவர்கள் தான் வீட்டுலகத்தில் பெறும் இன்பங் களிலும் மேலான இன்பத்தை இவ் வுலகத்திலேயே பெறுகிறார்கள்.

இனி அடுத்த படியாகவுள்ள துறவறத்தில் வாழும் துறவியின் நிலையைப் பார்ப்போம். அவனுக்கும் இவ் வன்புதான் துணை புரிய வேண்டும். துறவியாவான் உலகத்துப்பொருள்களை யெல்லாம் வெறுத் தாலும் கடவுளுடைய மோக்ஷ உலகத்தை வெறுக்கவில்லை. மோக்ஷ வுலகம் யாருக்கு இடந் தருகிறது? அன்போடு கடவுளை நாளும் நினைந்துருகும் அடியவருக் கல்லவா? அன்பில்லாது செய்யும் வழி பாடுகள் அவ் விறைவரால் ஏற்கப் படுவதில்லை. அன்பென்னும் வலை யிலேதான் அவர் சிக்குண்டு வசப்படுகிறார். சிவகோசரியார் என் னும் வேதியர் காளத்திமலையிலே கோயில் கொண்டிருக்கும் சிவ லிங்கப் பெருமானைத் தன் வாழ் நாள் முழுக்கவும் பூவும் நீரும் இட்டுப் போனகமும் கறியமுதும் ஊட்டிப் போற்றி வந்தார். அவருக்கு அப் பெருமான் இரங்கினார் இல்லை. கண்ணப்பர் என்னும் ஒரு வேடர் அன்பால் அகங்கரைந்து ஆறு நாளே வழிபாடு செய்தார். அவர் பூசைக்கு உவந்து சிவ பெருமான் சிவமாந் தன்மைப் பெரு வாழ்வை நல்கினார். அங்ஙனம் அருளுதற்குக் காரணம் அன்பன்றி வேறு யாது? வேடக் குலத்தில் பிறந்த அந்த நாயனாரது கரை

கடந்த அன்பை வியந்து மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருவாசகத்தில் "கண்ணப்பரை ஒத்த அன்பு என்னிடத்தில்லாமை கண்டும் என்னப்பன் என்னளவில் என்னையும் ஆட்கொண்டருளினுர்" என்று அருளிச் செய்யுமாயின் அவ்வன்பை இனியார் அறியப் போவது? கண்ணப்ப நாயனுரும் அறிவார்; காளத்திக் கடவுளும் அறிவார். இதனுல் துறவியும் தன் விருப்பத்தை அன்பு வாயிலாகவே நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதாகிறது. நீர் நிலையே இல்லாத மணற் பாங்கான பாலை வனத்திலே வற்றி உலர்ந்த ஒரு மரம் தளிர்த்தாலும் தளிர்க்கலாம்; அன்பில்லாத வாழ்க்கை பயனடைவது முடியாது.

"அன்பகத் தில்லா வுயிர்வாக்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று" என்பது திருக்குறள்.

இங்ஙனம் இல்லறம் துறவறம் என்ற இரண்டு பெரிய நிலைக்கும் ஆதாரமான அன்பு என்னும் குணக் கற்பகம் நுணுகிய அறிவுடைய இருவர் சந்திக்கும் அந்நேரத்தில்தான் முதன் முதல் தோன்றுகிறது. பின் நாளேற நாளேற அவ்விருவர் மனத்தையும் நெகிழச் செய்து ஒன்ருக்கி அவ்விடத்திலே, தான் வேரூன்றி வளர ஆரம்பித்துவிடுகிறது. சிறிது செல்ல அம்மரம் பச்சைப் பசேலென்ற இலைகளைத் தோற்றுவித்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து நினைக்கவும் உண்ணவும் தெவிட்டாத தேனுகித் தித்திக்கின்றது. அன்புடையவர்கள் மனம் மேகக் கறையில்லாத நீல வானத்தைப் போலவும் மலையடிவாரத்தில் ஓடிவரும் தெளிந்த நீரோடையைப் போலவும் களங்கமற்றுப் பரிசுத்தமாய் விளங்குகின்றது. கடவுளைக்கோரி அவர்கள் வேண்டும் பிரார்த்தனை முழுவதும் மண்ணையும், மனையையும், பொன்னையும், பொருளையும் பற்றியதாக இருக்கவில்லை. நெடிய வாழ்நாளையே அவர்கள் அவ்விறை முதலிடத்துக் கெஞ்சிக் கேட்டுப் பெறுகிருர்கள். ஓயாது ஒலித்துத் தொழில் புரியும் பகற் பொழுது அவர்களுக்கு வெறுப்பாக இருக்கிறது. இரவிலே வெள்ளிய நிலவிலே பசிய தென்னஞ் சோலையிலேயிருந்து அவ் விடத்துப் பாடி நகர்ந்து வரும் நதிகளையும் புதிய மணமும் நிறமும் உள்ள பூக்களையும் தளிர்விட்டுப் பின்னிப் படர்ந்த கொடிகளையும் அயலே சலசலத் தொளிரும் இலைக் கடலையும் பலமுறை பார்த்து அவர்கள் என்னென்னவோ பேசுகிருர்கள், பாடுகிருர்கள், சிரிக்கிருர்கள். அந்நேரம் அவர்கள் நினைக்கும்

நினைவுகள் எழுத்திலும் ஏட்டிலும் அடங்குவன வல்ல. தங்கள் எல்லை கடந்த எண்ணங்களைச் சொல்லி யனுப்ப மானையும், மயிலையும், குயிலையும், கிளியையும், வண்டையும், தும்பியையும், இத மொழிகூறி அழைக்கிறார்கள். அரசும் இதனைத் திரு நெறித் தமிழில் "நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ நிகழ்வண்டே" என்று அருளுவ தாயிற்று. நாள் பல கழியினும், வாரங்கள் பல நீங்கினும், மாதங் கள் பல போயினும், வருடங்கள் பல செல்லினும் அவர்கள் அன்பு மாறுவதில்லை. ஆ! அந்த நிலையான அன்பிலேதான் இல்லிலே யிருந்து செய்யும் தருமங்களெல்லாம் ஒழுங்காக நடை பெறுகின்றன. எச்சிற் கையால் காக்கையை வெருட்ட அஞ்சி விலாப் புடைக்கத் தின்று அயல் வீட்டில் விளக்கெரியப் பிடித்த மில்லாது வாழ்ந்து மண்ணொடு மண்ணாகிப் போவதற்கு உரிய தீயகுணங்கள் அவர்களை அண்டி வாழ்ந்தவரிடத்தும் தலைகாட்டுவதில்லை. அந்த நிலையான அன்பிலே தான் இறைவனது அருளுதயம் ஏற்படுகிறது. அது கொண்டு அவர்கள் தங்களுக்கு நேரும் துன்பங்களை யெல்லாங் கடந்து "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" என்ற அருள்வாக்கின்படி எல்லாம் கை கூடப்பெற்று முடிவில் மோக்ஷ நிலத்தையும் சென்று வாழும் பெரும்பேறு பெறுகிறார்கள்.

இன்சொல்

அதாவது—மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப் படுத்துவன வான இனிய சொற்களைச் சொல்லுதல்.

"மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங் கடின
வன் மொழியினா லிகழு மண்ணுலகம்" எனவும்
"இன் சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன் சொலா லென்றும் மகிழாதே"

எனவும் ஆன்றோர் கூறி யிருக்கின்றதற் கிணங்க இக் கடல் சூழ்ந்த பெரிய உலகத்தி லுள்ளவர் எப்பொழுதும் இனிய சொல்லினால் மகிழ் வரே யல்லாமல், கடுஞ் சொல்லினால் மகிழ மாட்டா ரன்றோ? ஆகை யால் எவரிடத்தும் இனிய சொற்களையே பேசுதல் வேண்டும். அவ் விதம் செய்யாமல், பிறர் கூறும் இனிய சொற்கள் தனக்கு இன்பந் தருதலை அறிந்தும் அவ் வின் சொல்லுக்கு மாறாக கடுஞ்

சொற்களைச் சொல்லுதல் தகுதியன்று. தமது பொருளில்லாமையினு லாவது, கொடுக்க மன மில்லாமையினு லாவது, யாசகர்க்கு அவர் வேண்டிய பொருளைக் கொடுக்க முடியா விட்டாலும் இனிய பேச்சுகளை யாவது பேசியனுப்ப வேண்டும். மனத்தில் தீய சிந்தனை யில்லாதவர் வற்புறுத்துதற்குக் கடுஞ் சொற் கூறினுலும், அவை தற்காலத்தில் கேட்டற்குக் கடியவை போன்றிருப்பினும் பயனை நோக்குமிடத்து நல்லவை யாதலால் வெறுப் படையாது அன்போடு ஏற்றுக் கொள்ள வேண்டும். மனதில் தீய சிந்தனையுடையவர் வெளிக்கு இன்சொற் கூறினுலும், அவை கேட்டற்கு இதம் போன்றிருப்பினும் பயனை நோக்கு மிடத்துத் தீயவை யாதலால் அவற்றை ஏற்றுக் கொள்ளாத தோடு அவற்றைக் கூறினரையும் வெறுத் தொழிக்க வேண்டும். நாம் பிறரிடம் சொல்லு மின்சொல் நமக்கு இடரைத் தருவதில்லை. நடுவு நிலைமையால் நம்மைப் போலவே பிறரையும் பாவித்து, நாம் கூறும் கடுஞ் சொற்கள் அவரை வருத்துமென்பதை யுணர்வோமாயின் கடுஞ் சொற்களைக் கூற இடமில்லை. மேலும், கோபமே கடுஞ் சொல்லுக்குக் காரண மாதலால் அதையும் அடக்க வேண்டும்.

இன்சொல் எல்லார்க்கும் பொதுப் படச் சிறந்த தாயினும் இல்வாழ்வார்க்கு விருந்தோம்பு மிடத்து இன்றி யமையாத தாகும். "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்றபடி மனத்திலுள்ள அன்பை முக மலர்ச்சியால் வெளியாக்கி, விருந்தினரைக் கண்ட பொழுதே முக மலர்ந்தவனுய் இனிது நோக்குதல் இனமான முதற் குணமாம். விருந்தினரைத் தூரத்திற் பார்த்த பொழுது இன் முகமும், அது பற்றிச் சமீபித்த பொழுது இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்ட பொழுது உபசாரஞ் செய்தலும் என விருந்து ஓம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாவ தான இவ்வின்முகம் இல்லாதவிடத்து விருந்தினர் தூரத்திலேயே வாடி நீங்குவ ராகையால் இவ்வின்சொல் விருந்தோம்பு வார்க்கு அவசிய மானது.

இனி, இன்சொல் சொல்லுதல் இருமையும் இன்பந்தரும்.

"சிறுமையுள் நீங்கிய வின்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும்"

என்ற திருக்குறளையும் காண்க.

"பணிவுடையனின்சொல னுதல் லொருவர்க்கு
அணியல்ல மற்றுப்பிற" (திருக்குறள்)

இன்சொல்

அதாவது—வணங்கத் தக்கவரிடத்து வணக்கமுடன் இனிய சொற்களைச் சொல்லுதல், ஒற்றுமை யுடையதாய் வேற்றுமை யுடைய ஆபரணங்க ளெல்லாவற்றிலும் பேரழகு செய்வதாம் (இன்சொலனுதற்கு இனமாதலால் பணிவுடைமையும் உடன் கூறினர்.) எவரிடத்தும் இன்சொல்லே சொல்வார்க்குப் பகைவரும் அயலாரும் இல்லாமல் யாவரும் நண்பரேயாவர். ஆகவே அவர் எல்லாச் செல்வமும் அடைவர். மறுமையில்.

"விளக்குப் புக விருண் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது" (நாலடியார்)

என்ற செய்யுளுக்கிணங்க, பாவமானது தன் பகைவனுகிய அறம் வளர்தலால் தனக்கு நிற்க இடமின்றி மெலிந்து போகும்.

"நல்லவை நாடி இனிய சொலின்
அல்லவை தேய அறம் வளரும்"

என்றபடி நன்மைதருஞ் சொற்களை நாடிச் சொல்லும் பொழுதும் இனிய சொற்களாற் சொல்லவேண்டும்; கடுஞ்சொற்களாற் சொல்லின் தரும மாகாது.

"நாவி னுனியி னயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரு நண்ணுவார்—நாவினுனி
ஆங்கடின மாகி லத்திருவுஞ் சேராண்முன்
ஆங்கே வருமரண மாம்." (நீதிவெண்பா)

என்றபடி, நாக்கில் இனிய சொல்லிருந்தால் திருமகளும் இன்சொல்லை யுடைய நல்லோரும் பொருந்துவார். நாக்கில் கடுஞ்சொல்லிருந்தால் அந்தத்திருவும் பொருந்தாததோடு அப்பொழுதே மரணமும் வரும். எனவே கடுஞ் சொற்களைக் கூறுபவர்க்குத் தரித்திரம் வருமென்பது இதன் தாற்பரியம். ஆகையால் நாம் அனைவரும் இன்று தொட்டு இனிய சொற்களை வழங்குவோமாக! அப்பொழுதே நம் நாடும் ஒற்றுமையடைந்து நாமும் திரு அருள் பெற்று இன்புற்றிருப்போம்.

அ. ச. அருணசலேச்வரர்.

உ

"லக்ஷ்மி"

துதி.

வெண்பா.

செந்தமிழ் நாடு செழித்தோங்கத் தேசமெல்லாம்
நந்தமிழின் செல்வ நலம்பெருக—வந்தகலை
மாதும் திருமகளும் மாண்புற்ருர் ஒருருவாய் ;
ஓதுபெயர் "லட்சுமி" என்போம்.

விருத்தம்.

பத்துலட்சம் படையுடையோர்க்கும், மேல்
எத்துணைப் பெரியோர்க்கும் இப்பூமியில்
சித்துலட்சணச் செல்வி யுருக்கொண்ட
முத்துலட்சுமி முன்னிற்கைவேண்டுமே.

பத்தியிற் குறைந்தோரேனும்
பதவியி லிழிந்தோரேனும்
வித்தையிற் குறைந்தோரேனும்
விநயம் ஒன்றில்லாரேனும்

புத்தக வடிவிற் காணும் புனித
லட்சுமியைப் போற்றின்
எத்தகையோரும் என்றும்
இன்பவாழ் வெய்துவாரே.

ழ. போ. ஈசுவாழூர்த்திப் பிள்ளை.
அன்பகம்,
முன்னீர்ப்பள்ளம்.

மதிப்புரை

செந்தமிழ்ச் செல்வி—இத்தலைப் பெயர் புனைந்த மாதப் பத்திரிகை ஒன்று தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் ஆதரவில் வெளிவருகின்றது. அதில் அழகிய கடிதத்தில் கண்ணைப் பறிக்கும் முத்துப்போன்ற எழுத்துக்களில் பல விஷயங்கள் வெளிவருகின்றன. தலைப்பில் நந் தமிழ் நாட்டிலிருந்த பண்டைப் பெரியார்களது படங்களும் உள்ளன. இங்ஙனம் அழகு கனிந்து கண்ணுக்கு விருந்துசெய்யும் அது அறிவுடையார் மனத்துக்கும் விருந்துசெய்யும் ஆழ்ந்த பொருள் நலமும் பெற்றுத் திகழுமாயின் மதியுடைய நீல வானம்போலச் சிறப்புடையதாகும்.

திருவள்ளுவர் நூல்—இது திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீமான் ஆர். பி. சேதுப்பிள்ளையர்கள் B.A., B.L., எழுதிய ஒரு சிறு நூல். நூலின் ஒவ்வொரு பகுதியிலும் பிள்ளையவர்களின் ஆராய்ச்சி நுட்பம் நன்கு விளங்குகின்றது. திருக்குறள் ஆராய்ச்சி செய்வோர்க்கு இது பெரிதும் பயன்படுமென்பதற்கு ஐயமில்லை. இதன் விலை ரூ. 1. வேண்டுவோர் சைதாப்பேட்டை தருமராஜா கோயில் தெரு, M. E. வீரவாகு பிள்ளை, B. A., அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

உலகப் போக்கு

காஞ்சியிலும் காஞ்சியைச் சுற்றியும் சுமார் 40,000 கைத்தறிகள் வேலை செய்கின்றன. இவற்றில் நான்கில் ஒருபங்கு பட்டுவேலை செய்கிறது.

பருத்தி வியாபார நிலைமை; லண்டன் டிச. 29. பருத்தி வியாபாரத்தில் வாரத்திற்கு 5 லட்சம் பவுன் நஷ்டப்படுவதாக ஸர். ஸர்ஸஸ் மக்கரா என்பவர் மான்செஸ்டர் என்னுமிடத்தில் உபன்னியாசித்தார்.

புஷ்பங்களும் வெளிச்சமும்—அமெரிக்கா ஐக்ய மாகாணத்தில் புஷ்பங்களை சூரிய வெளிச்சமின்றி உறங்கவும் விழிக்கவும் செய்யக்கூடிய ஓர்வித வெளிச்சம் கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதனால் சூரிய வெளிச்சமில்லாக் காலங்களிலும் புஷ்பங்கள் புஷ்பிக்கச் செய்யக்கூடுமாம்.

18 மாதத்தில் 9 குழந்தைகளைப் பெற்றதாய் :—அமெரிக்கா ஐக்கிய நாட்டில் ஒரு 30 வயதுப் பெண் 1915-ஆம் மே-மீ 5 குழந்தைகளையும் 1916-ஆம் நவம்பர்-மீ 4 குழந்தைகளையும் பெற்றாள். ஆக 18 மாதத்திற்குள் 9 குழந்தைகளைப்பெற்றவளாகிறாள்.

உள் மனம்

ஸ்ரீமான் பி-ஸ்ரீ-ஆச்சார்யா எழுதியது.

நவீன உலகின் நவீன ஆராய்ச்சி.

மனித உள்ளத்தைக் குறித்து மேல் நாட்டார் இப்பொழுது ஆராய்ச்சி செய்து பல பல அதிசய உண்மைகளைக் கண்டு வருகின்றனர்.

மனித உள்ளத்தின் புறத் தோற்றத்தையே பொதுவாக அவர்கள் மனமென்று கருதினர். புறமனம் பகுத்தறியும் மனம். பகுத்தறிவே மேலான அறிவு. பகுத்தறியும் மனத்தின் சான்றே மனச்சாட்சி. இம்மனச் சான்றே தெய்வம் அல்லது தெய்வ வாக்கு. இம்மனமும் ஸ்தூல உடம்பின் காரியமாய், அவ்வுடம்பை ஆதாரமாகக் கொண்டே, தன் தொழிலைச் செய்கின்றது. இவை மேனாட்டாரின் பழைய கொள்கைகள்; இப்பொழுது நவநவமான ஆராய்ச்சியின் பயனாக அவைகள் மாறி வருகின்றன.

உள்ளமே உடம்பிற்கு ஆதாரமென்றும், உள்ளத்தால் உடம்பும் உடம்பால் உள்ளமும் பாதிக்கப்படு மாயினும் விசேஷமாக உள்ளமே உடம்பை வசமாக்கிப் புதுப்பிக்க வல்ல தென்றும், மேல் நாட்டுப் புதிய உள நூலார் (New Psychologists) ஒப்புக் கொள்ளுகின்றனர். இன்னும் பல உண்மைகளும் புதிய ஆராய்ச்சியால் வெளியிடப் பெறுகின்றன.

உள்ளத்தின் ஆழ்ந்தபாகம்.

உள்ளத்தின் ஒரு பகுதி புறமனம். இதன் பெரும்பாகம் நமக்கு வசமாக வில்லை. இதனை ஆழமிட முயன்றவர் நமது நாட்டு யோகிகளும் சித்தர்களுமாவர். உள்ளத்தின் ஆழ்ந்த பகுதியை இப்பொழுது தான் புதிய உலகம் கண்டு வருகின்றது. இது உள் மனம் (Sub-conscious Mind) என்றும், 'உணரப்பெறாத உள்ளம்' (Unconscious Mind) என்றும் கூறப்படுகின்றது. உள்மனத்திற்குச் செய்யும் உபதேசம் உடன் தானே பலன்தரும் என்னும் உண்மையைப்பழைய காலங்களில் மந்திர யோகியரும் பிறரும் உணர்ந்திருந்தனர்; இப்போது மேல் நாட்டு உள நூலார் உணர்ந்து வருகின்றனர்.

உள் மனம்

உள் மனமும் வசிய நித்திரையும்.

புறமனத்தைத் தூங்கச்செய்தால் உள்மனத்திற்கு நேராக உபதேசம் செய்து பலன்களை அடையலாம். இவ்வுண்மையே மெஸ்மெரிஸ்-ஹிப்னுடிஸப் பழக்கங்களுக்கு அடிப்படை யுண்மையாகும். ‘மெஸ்மெரிஸம்’ அல்லது ‘ஹிப்னுடிஸம்’ செய்யும் கர்த்தா, தனது சீடனை ஒருவகை வசிய நித்திரைக்கு உள்ளாக்கு கின்முன். அப்பொழுது புறமனம் அயர்ந்து தூங்க, தூங்கா மனமாகிய உள்மனம் தன் பால் சொல்லப் படுவதை யெல்லாம் எளிதில் நம்பி விடுகின்றது. சாதாரண நித்திரையிலும் புறமனம் தூங்குகின்றது; உள் மனம் எப்பொழுதும் விழித்துத் தொழில் செய்யத் தயாராகவே யிருக்கின்றது.

உள் மனமும் கல்விப்பயிற்சியும்.

இவ் வுண்மையை மேல்நாட்டார் சிலர் கண்டுணர்ந்து சில புதிய ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கி யிருக்கின்றனர். அமெரிக்காவில் ஆகாயக் கப்பல் படை விஷயமாகப் பயிற்சி செய்விக்கும் ஒரு கல்விச்சாலையில் செயற்கரிய செய்யும் உள் மனத்தின் உதவியால் இளைஞர்களுக்கு உறங்கும் காலத்தில் கம்பி யில்லாத் தந்தி விஷயமான பாடங்கள் எளிதில் கற்பிக்கப் படுகின்றன. மறுநாள் துயில் உணர்ந்து எழுந்தபின், நித்திரையில் நடந்த விஷயங்கள் ஞாபக மில்லாம லிருந்தாலும், பாடங்களை மாணுக்கர்கள் விரைவாகக் கற்றுணர் கின்றனர். இவ்விதமாக 3 மாதங்களில் அப்பியசித்துக் கொள்ள முடியாத விஷயங்கள் ‘நித்திரை—மனத்தின்’ அல்லது உள்மனத்தின் உதவியால் ஒரே மாதத்தில் நல்ல பழக்கத்திற்கு வந்து விடுகின்றன என்று அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் கப்பற்படை யிலாகா அறிக்கை யிடுகின்றது.

உள்மனமும் புறமனமும்.

மனத்தின் அதி அற்ப பாகமே புறமனம். நூறு காரியங்களில் புறமனம் ஒன்று செய்தால் உள்மனம் 99 செய்து நமக்காக என்றும் உழைக்கின்ற உத்தம சேவகனு யிருக்கின்றது. நமது தொழில் உரிமையிலுள்ள இவ் ஆஞ்சனேயனை ஏவி ஆட்கொள்ளும் உபாயங்கள் பல பழைய தந்திர நூல்களிலும் யோக நூல்களிலும் மந்திர சாஸ்திரங்களிலும் புதிய ஹிப்நாடிஸ்—மெஸ்மெரிஸ் முறைகளிலும் இலை மறை காய் போல் பொதிந்து கிடக்கின்றன.

புறமனம் எங்கே முடிகின்றது ; உள்மனம் எங்கே தொடங்குகின்றது என்று வரையறுத்து எல்லைக்கல் நாட்ட இயலாது. இருள் கிழித்து ஒளிரும் மின் என மனத்தின் கண் ஜ்வலித்தெழும் கருத்துக்களிற் பல, உள்ளத்தின் ஆழத்தே யிருந்து—சாதாரணமாக உணரப்பெறுத உள்மனத்தின் உதரத்திலிருந்து—எழுவதாகத் தோன்றவில்லையா? இதுவே மகா மேதாவியர்க்கு ஞானஒளி உதயம் செய்யும் பிரதேசமாகும். உதாரணமாக நமது பாரதியாரது கவிகளில் மேலானவை அவரது உள் மனத்திலிருந்து பிறந்தன ; அவரது புறமனத்தின் சிந்தனைகளால் அவை பாடப்பெறவில்லை—என்னும் உண்மையினை நமது தேசபக்த ஆசுகவியோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்ற நண்பர்கள் நன்குய் அறிவர். 'கவி பிறக்கின்ருன் ; கவி ஆக்கப்படுவதில்லை' என்பது ஆங்கிலேயரது நல்லுரை. அறிவுத் தெய்வத்தின் (ஸரஸ்வதி தேவியின்) அருட்பெருக்கால் திருவுடையார்க்குக் கவிச்செல்வம் பெருகி வரும் என்று நமது நாட்டார் நம்புவதும், உள்மனத்தின் ஆழத்திலிருந்து கவி பிறக்கின்றதென்பதையே குறிப்பிடுகின்றது.

நமது பண்டசாலை.

உள்மனம் மெய்யாகவே ஒரு வளமான பண்டசாலையாக விளங்குகின்றது. நமது ஞாபக சக்திகளின் உறைவிடம் இதுவேயாகும். மனிதன் தூங்குகையிலும்—அதாவது புறமனம் தன் கடமையினின்றும் விலகி இளைப்பாறிக் கொண்டிருக்கையில்—தூங்கா மனமாகிய உள்மனம் 'இளைய பெருமாளை'ப்போல நமக்குப் பணி செய்யச் சித்தமா யிருக்கின்றது. ஞாபக சக்திகளின் பொக்கிஷ சாலையான இவ் உள்மனத்தின் துணையால் கல்விப்பயிற்சி அதி சுலபமாகச் சித்தியாகும் என்பது பொருத்த மானதே.

ஞாபக சக்தியே நமது உயிர்நிலை. மனிதனது உயர் நிலைக்குக் காரணமாவதும் அதுவே. ஞாபக சக்தியின்றி நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. ஞாபக சக்தியை ஊன்று கோலாகக் கொண்டே நம் செயல்களெல்லாம் நடை பெறுகின்றன. ஞாபக சக்தியின்றேல் நாம் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல வலியயற்றவர்களா யிருப்

போம். ஆதலால் ஞாபக சக்தி அழியுமானால் மனிதனே அழிந்து போவான் என்று நமது நாட்டு அறிவு நூல்கள் முறையிடுகின்றன.

மனமும் மூளையும்.

ஞாபக சக்திகள் மூளையென்னும் விசித்திரமான ஜீவரத்தினப் பெட்டியில் ஒழுங்காக அடக்கி வைக்கப் பெற்றிருக்கின்றன.

ஒரு பத்திராதிபர் தன் காரியாலயத்தில் தமது தினக்கடமையை முடித்து மேசையை ஒழுங்கு பெறச்செய்கிறார். படிகள் மீதேறி வீட்டிற்குள் பிரவேசிக்கிறார். பிறகு வழக்கமான வழியே சென்று உலாவச் செல்லுகிறார், அல்லது உல்லாச விடுதிக்கு ஓய்வு நேரத்தைக் கழிக்கச் செல்லுகிறார்.

இச் செயல்களெல்லாம் புறமனத்தின் ஆலோசனையின் மேல் செய்யப்படுவ தில்லை. நாம் வேறொன்றை நினைத்துக் கொண்டிருக்கும் போதே இச் செயல்கள் தாமாகவே வழக்கம்போல் நடை பெறுவதைப் பார்க்கிறோம். உள் மனம் புற மனத்திற்குச் சிரம மில்லாமல் பல காரியங்களையும் செய்து விடுகின்றது. செய்து செய்து பழக்கப் பட்டிருக்கும் பழைய ஞாபகங்கள் உள் மனத்துள் ஆழ்ந்து கிடப்பதே இதற்குக் காரணம். உள் மனத்துள் மறைந்து கிடக்கும் நினைவுகளும் அவற்றின் வாசனைகளும் இன்ன வழியே செல்ல வேண்டுமென்றும், இன்ன மூலை முடுக்குகளைத் தாண்டிச் செல்ல வேண்டு மென்றும் தெரிந்து நாம் அறியாமலே நம்மை நடத்து கின்றன.

ஞாபகம் ஒரு நிமிஷமாவது தவறுமானால், குழப்பம் ஏற்படும்; நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற ஆச்சரியம் தோன்றும்; 'இனி அடுத்துச் செய்ய வேண்டியது யாது?' என்று நம்மை நாமே வினவ நேரிடும். ஞாபக சக்திகளின் களஞ்சியமாய் விளங்கும் உள் மனம் இவற்றை மூளை வேண்டும் தருணங்களி லெல்லாம் கிரகித்துக் கொள்ளும்படியில் சேகரித்து வைத்திருக்கின்றது. இது எங்ஙனம் நிகழ்கின்றது என்பதை ஒருவரும் அறியார். ஆனால் இது நிகழ்வதற்கு மூளை அவசியமானது என்பது வெளிப்படை.

மூளையின் அற்புத அமைப்பு.

மூளைக்குக் கெடுதி ஏற்பட்டால் சில ஞாபக சக்திகள் அல்லது எல்லா ஞாபக சக்திகளும் அழிந்து போகக்கூடும். மூளையின் ஓரங் களில் ஞாபகசக்திகள் இனம் இனமாக நெருங்கிக் கிடக்கின்றன. இரண்டு பக்கங்களிலும் காதுகளுக்குமேலே, சப்த ஜாலங்களின் குறிகள் பதிந் திருக்கின்றன. அருகே, அன்னையர் தீம் பாலோடு பருகிய தாய் மொழியின் இனிய சொற்களும், குழந்தைப் பருவத்தில் கற்ற வினோதப் பாட்டுக்களும், அன்பார்ந்த தோத்திரங்களும், வாழ்த்துக்களும், குறிப்பாகப் பதிவுசெய்யப் பெற்றிருக்கின்றன.

கபாலத்தின் பின்பக்கத்தின் கீழுள்ள மூளையின் பகுதி, காட்சி யின்பத்தின் களனாய் விளங்கு கின்றது. நாம் கண்டறிந்த பொருள் களும் காட்சிகளும் சூட்சுமமாக அங்கே காணப் படுகின்றன. காத லர்களின் திருமுகங்களும், இயற்கையின் இந்திர ஜாலங்களும், பழைய அனுபவங்களின் படங்களும் அங்கே சித்திரிக்கப் பெற்றுச் சுடர் கின்றன.

மனம் என்னும் பிரதேசத்தில் குடியிருப்பவர் பலர். அங்கே ஒளிமயமான சக்திகள் எண்ணிறந்தன, சமுதாயமாகக் கூடி ஒத்து வாழ்கின்றன. நமது மூளையிலுள்ள நரம்பின் 'சிறு சைதன்யங் கள்' (Cells) சுமார் 200,000,000 ஆகும். இவற்றில் ஒவ்வொன் றும் ஒவ்வொரு கடமை அல்லது 'சுதர்ம'த்தைச் செய்கின்றது. பிரபுக்களும், பிறரும் கருத்துக்களை இணைத்தும், தீர்ப்புச் செய் தும், உபாயங்களையும், புதிய உண்மைகளையும் கண்டு பிடித்தும், நம்மை அறிஞராக்கும் விஞ்ஞான சக்திகள், நெற்றியின் எலும்புச் சுவருக்குப் பின்னுள்ள மூளையின் மேல் மாடியில், கொலு வீற்றிருக் கின்றன. இவை மனம் என்னும் மகா ராஜ்யத்தின் 'முதலாளி' களாகும்.

பகுத்தறியும் விஞ்ஞான சக்திகள் நாம் தூங்குகையில், தாமும் இளைப்பாறுகின்றன. ஆனால் தூக்கத்திலும் உள் மனத்துள் கிடக் கும் ஞாபக சக்திகள் விழித்துத் தொழில் செய்கின்றன. அதாவது புறமனம் தூங்க, உள்மனம் என்றும் தூங்காது பணி செய்யக் காத்திருக்கின்றது.

உள் மனம்

உள்மனமும் கனவுகளும்.

உள்மனத்துள் ஆழ்ந்துகிடக்கும் ஞாபகங்களிலிருந்தே, பெரும் பாலும் கனவுகள் தோன்றுகின்றன. சில சமயங்களில் கனவாய் வெளிப்படும் ஞாபகக் குறிப்புக்களிலிருந்து புறமனத்திற்கும் பயன் தரும் விஷயங்களும் கிடைக்கக் கூடும்.

கனவுகளி லிருந்து பல முற்குறிகளும் எச்சரிக்கை களும் கிடைக் கவும் கூடும். இத்தகைய கனவுகளைக் குறித்து இப்போது நாம் பிரஸ்தாபிக்க வரவில்லை.

உள்மனப்பயிற்சியும் கல்விப்பெருக்கமும்.

தூங்குகையில் ஒருவனது புறமனம் அயர்ந்து தூங்க, உள்மனம் விழித்திருக்கு மாகையால் அப்போது செய்யும் உபதேசங்க ளெல்லாம் உள்மனத்தில் எளிதில் பதிந்து விடுகின்றன. 'கிராமபோன்' அல்லது சப்தப் பிரதிப்பெட்டியின் சக்கரத்தில் (Disc) சொற்கள் பதிவதுபோல, நித்திரை மனத்தில் பதிவு செய்யப்படும் விஷயங்கள் புறமன எதிர்ப்பின்றி ஞாபக சக்திகளின் களஞ்சியத்தில் போய்ச் சேர்ந்து விடுகின்றன.

இத்தகைய உள்மனப் பயிற்சி, வருங்காலத்தில் கல்விப்பயிற்சி யின் முக்கிய அமிசமாகக் கருதப்படு மென்பது திண்ணம். அன்னிய மொழிகளைக் கற்பிப்பதிலும், உபந்யாஸ வாயிலாகச் சரித்திரம், கணி தம் ஆதியவற்றைக் கற்பிப்பதிலும் உள்மனப்பயிற்சி அதி சுலபமான மார்க்க மாகும்.

உள்மனப் பயிற்சிக்கு உரிய முறைகளால் ஞாபகசக்தி குறைந் திருப்பவர்களுக்கு அதனை அதிகரிக்கச் செய்யலாம். வேண்டுவோர் இவற்றால் தம் வாக்கு வன்மையை விருத்தி செய்யலாம். நாம் இங் ஙனம் நமது அச்சத்தைப் போக்கலாம் ; அறியாமையை அகற்றலாம்; கெட்ட பழக்கங்களை மாற்றலாம் ; கல்வியைப்பெருக்கிக் கொள்ள லாம் ; கவலையற்ற இன்பப் பெருவாழ்வு வாழலாம்.

மனோன்மணீய வசனம்

ஸ்ரீமான் S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L. எழுதியது.

அதிகாரம் IV: மனோன்மணியின் கனவு.

242-ம் பக்கம் தொடர்ச்சி.

இன்று மாலையில் இளந்தென்றல் பரிமளங் கமழ்ந்து மெல்லெனத் தவழ்ந்தது. அரண்மனையைச் சார்ந்த பூஞ்சோலை நூதன ஜீவசக்தி பெற்றுளதுபோல இனிதாய் உயிர்த்தது. மரங்களும் கொடிகளும் ஒன்றோடொன்று இணங்கிப் பிணங்கிக் கொஞ்சி விளையாடின. உள்ளூற நிறைந்து ததும்பிய இன்பத்தால் சோலை புன்னகை பூத்து விளங்கிற்று. பூங்கொம்புகளிலும் பூங்கொடிகளிலும் பக்ஷிஜாலங்கள் உத்ஸாகத்துடன் எதிர்கூவிக் களித்திருந்தன. புள்ளிமான்கள் ஆசைபெற விழித்துக் குதித்தோடிச் சுற்றிவந்தன.

மனோகரமாகிய இப்பூஞ்சோலையிற் புகுந்து நமது கதாநாயகியும் தோழியரும் செவிலியும் சிறிதுநேரம் உலாவி வந்தனர். சிறிது நேரம் களித்து விளையாடி யிருந்தனர். அமுதம் ஊற்றிருக்கும் குமுதவாயினால் இனிய கதை சொல்லச் சில பொழுது சென்றது.

சந்திரோதயம் ஆயிற்று. நிலவின் ஒளி வெள்ளம் எங்கும் பொங்கிப் பெருக்கெடுத்துப் பரந்தது. அரண்மனை நெடுமுற்றத்தே ஜீவகன் செல்வப் புதல்வியும் தோழியரும் நிலவு வெள்ளத்தில் குளித்து நீந்திப் பந்து விளையாடி யின்புற்றனர்.

இவ்வாறாகச் சில நேரங் கழிந்ததும், மேல் மாடிக்குச் சென்று அங்கே யிருந்த ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் மனோன்மணி துயில்கொண்டாள். அயர்ந்த நித்திரை. வேடன் கையம்பினால் உயிர்க்களத்தில் எய்யப்பட்ட ஒருமான் வருந்திச் சப்தமிடுதல் போலத் திடீரென்று ஒரு தொனி யுண்டாயிற்று. பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த செவிலிக்கு 'நண்ப, என்னுயிர்நாத' என்று தன் இன்னுயிர்த் தலைவி புலம்புதல் கேட்டது. மஞ்சத்தை நெருங்கி அதிற் பதிந்து கிடந்த பெண்மணியை யுற்று நோக்கினள். அண்ட முடியாத

ஜ்வரம். முகமெல்லாம் இரத்தப் பசையற்று வெளிறி யிருந்தது. சரீரம் மிகவும் வாடியிருந்தது. அடிக்கடி விழி பிறழ்ந்தது. வாய் குழறிப் புலப்பமிகுந்தது. பெரு மூச்சினிடையே கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று.

செவிலியரும் தோழியரும் இதைக் கண்டதும் மிகக் கலக்கங் கொண்டார்கள். ஏதேனும் தெய்வ தோஷமாக இருத்தல் கூடுமோ என்று நினைத்துப் பல தெய்வங்களுக்கும் கடன் நேர்ந்தார்கள். திருஷ்டி தோஷம் ஏற்பட்டிருக்கக் கூடுமோ என்றெண்ணி நீர் ஓதித் தெளித்து விபூதி யணிந்தார்கள். தங்கள் அரும் பெற்ற செல்விக்கு நோய் தணியும் பொருட்டு சைத்தியோ பசாரங்கள் பலவும் செய்தார்கள். ஆனால் மயக்கம் வரவர அதிகரித்ததே யன்றிக் குறைவுபட வில்லை. மிக்க வருத்தத்துடன் இரவு கழிந்தது. காலையில், அரசன் அறிந்தால் தங்களைப் பெரிதும் கோபிப்பான் என்றெண்ணிச் செவிலியர் கூடிக் 'குறி' சொல்வோரை வரவழைத்துக் குறி கேட்டு நிவிர்த்தி செய்ய வழிதேடினர். யாதொன்றும் பயன்பட வில்லை. கடைசியாய் ஜீவக வழுதியிடத்தில் இனித் தெரிவியாதிருத்தல் அபாயம் என்றேற்பட்டது. செவிலி அரசனிருக்கும் காலைக் கொலுவிற்குச் சென்றாள்.

அங்கே ஜீவக அரசனும் அவனது மனத்திற் கிசைந்த குடில மந்திரியும் நெருங்கிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். சம்பாஷணை விஷயம் சுந்தரமுனிவரே. சிறிது தூரத்தில் பாண்டிய குல நண்பனாகிய நாராயணனும் இருந்தனன்.

மதுரையிலிருந்து வந்த தனது குலகுருவை ஜீவகன் தனது அரண்மனையிலேயே தங்கி யிருக்கும் படியாக வேண்டிக் கொண்டனன். ஆனால் கருணா நிதியாகிய சுந்தரமுனிவரோ அதற்கிணங்காது நகரத்திற்கு வெளியே தாம் அமைத்துள்ள ஓர் ஆச்ரமத்தில் வசித்துவரத் திருவுளங் கொண்டனர். தனது வேண்டுகோளை அங்கீகரிக்க வில்லை யென்றதில் ஜீவகன் வருத்தங் கொண்டிருந்தான். அன்றியும் ஆழ்ந்த நோக்கத்தோடு தான் ஸ்தாபித்து முடித்த தலைநகரத்தை முனிவர் மதிக்கவில்லை யென்றதும் அரசனைத் துன்புறுத்துவ தாயிற்று. ஜீவகனுக்கு முனிவர் மீதுள்ள விசுவாசத்தை எப்படியேனும் தொலைத்து விடவேண்டுமென்ற உட்கருத்துடைய குடிலன்

தன் நோக்கம் நிறை வேறுவதற்கு இதுவே தக்க சமயம் என்று நினைத்துப் பலவாறு கோள் மூட்டிக் கொண்டிருந்தான்.

துடிலன் :—"நமது நகரத்திற்கு என்ன குறை யிருக்கிறது? ஒன்றையும் காண வில்லையே! முனிவருக்குப் பிரியமான மதுரைப்பதி யன்றென்னும் ஒரு குறை தான் உண்டு. துறவிகளுக்கு ஆலய மொன்றுதான் தெரியும். ஒரு கோயில் எடுப்பித்து அதில் உத்ஸவங்கள் எப்பொழுதும் நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று முன்னொரு முறை சுந்தரர் நமக்குக் கட்டளையிட்டார். அவ்வாறு செய்யாமல், இப்படிக் கோட்டை கொத்தளம் அமைத்து விட்டோம். இதனால் தான் முனிவர் நமது தலைநகரைப் பற்றிச் சிறிது இகழ்ச்சியோடு பேசினர். இவரைத் தவிர வேறொருவர் இவ்விதம் கூறியிருப்பின், அதற்குக் காரணம் 'பொறாமை' யென்றுதான் நிச்சயமாய்ச் சொல்லுவோம் ஆனால் முனிவர் நமது குலகுரு ஆயிற்றே———."

ஜீவகன் : "வாஸ்தவந்தான். முனிவருக்கும் பொறாமை தான். கோவில் கட்டிக்கொண்டிருப்பது தானா அரசர்களுடைய கடமை. மிகக் கேவலம்."

துடில : "சுந்தரருடைய செய்கையில் அதிசய மொன்றுமில்லை. துறந்தவர்க ளெல்லாம் இரண்டொரு விஷயங்களை மறந்தவர்களே யல்லாமல் முற்றும் பற்றுவிட்டவர்கள் கிடையாது. அவர்களுடைய ஆசை ஒரு போதும் அடங்காது. உலகத்திலுள்ள பொருள்களை யெல்லாம் ஓர் அழகிய கோயிலில் கொட்டி நிறைத்தாலும் அவர்களுக்கு ஆசை தீராது. வேறொரு காரியம். வசிஷ்டமுனிவர் அரசர்களுடைய திரவிய முழுவதையும் யாகஞ்செய்து யாகஞ்செய்து பாழாக்கினர். விசுவாமித்திரர் யாகஞ் செய்ததால் சக்ரவர்த்தியாகிய அரிச்சந்திரன் பட்டபாடு லோகந்தோன்றி யிதுவரை ஒருவரும் படவில்லை. சிஷ்டர்களான இந்த முனிவர்களால் தேவேந்திரன் அடிக்கடி மாறு வேஷம் பூண்டு ஒளித்து நடக்கவேண்டிய தாயிற்று. முனிவர்களானால் என்ன? எல்லாரும் மனிதர்கள் தானே."

" நீர் சொல்வது சரியாய்த்தான் இருக்கிறது " என்று ஜீவகனும் தலையசைத்து ஒப்புக்கொண்டான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த நாராயணனுக்கு ஆற்றொணுத் துயரம் மேலிட்டது. அரசனோ, எடுப்பார் கைப்பிள்ளை போலிருக்கிறான். குடிலன் முனிவரைப் பொய்யனாக்குவதில் தான்கற்ற சாமர்த்திய மெல்லாம் காட்டுகிறான். இதை நாராயணனால் சகிக்கக்கூட வில்லை. எவ்வாறேனும் உண்மையைக் குறிப்பாய் உணர்த்த வேண்டு மென்றெண்ணி

" கொல்லா யெனப்பகைஞர் கோற்றொடியார் கும்பிட்டுப்
பல்லிளிக்கக் கண் சிவக்கும் பார்த்திபனே—பொல்லா
வெறும் எலும்பை நாய்கௌவும் வேளைநீ செல்ல
உறுமுவ தென் நீயே யுரை "

என்ற செய்யுளைச் சொல்லினன்.

வித்வான்களுக்கு 'தோஷக்ஞர்' என்ற பெயரிருத்தல் நமது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். ஜீவக அரசன் வித்வான்களோடு மிகப் பழகினவன். அதனால் கவிதைகளின் குற்றங் குறைகளைத் தேர்வதில் தனக்கு ஆற்ற லுண்டென்று பரிபூர்ணமாய் நம்பி யிருந்தான். இச்செய்யுளைக் கேட்டமாத்திரையில், அதன் பொருள், குறிப்பு முதலியவற்றில் தனது கருத்தைச் செலுத்தாமல் அதிலுள்ள குற்றங்களை நுட்பமாய் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

இச்சமயத்தில் வாணியின் பிதா சகடர் வந்து சேர்ந்தனர். இவருக்கு, தமது புத்திரியின் மணத்தைப் பற்றியே எப்பொழுதும் சிந்தனை யாயிற்று. அவளது கருத்துக்கு இவர் இணங்குவதாயும் இல்லை. இவரது கருத்துக்கு அவள் இணங்குவதாயு மில்லை. அரசனிடம் தெரிவித்து அவன் மூலமாகத் தம் மகளைத் தம் சொல்லுக்கு அடங்கும்படி செய்யலாமென்று எண்ணினர். இவர் வந்ததும் அரசன் இவரது யோக க்ஷேமங்களை விசாரித்தான். கடைசியில் ஏதாவது விசேஷ முண்டா என்று கேட்க,

சகடர் :—அமைச்சர் குடிலரது புத்திரருக்கு எனது புதல்வியை மணம் செய்துவைக்க வேண்டு மென்று எனது கருத்து. சமுகத்தின் கருணை யில்லாமல் அது முடியாது. கருணை செய்யும்படி பிரார்த்திக்கத் தான் வந்தேன்.

ஜீவக :—சந்தோஷம்! எல்லாவகையாலும் பொருத்தம்தான். குடிலரே, ஏன் இவ்விஷயத்தை நமக்கு அறிவிக்க வில்லை?

குடில :—நடக்கக் கூடியதாயின் சமுகத்தில் தெரிவியாதிருப்பேனு?

ஜீவக :—என்ன தடை? பல தேவனுக்கு இஷ்டமில்லை போலும்?

குடில :—அல்ல. சகடர் தான் சொல்ல வேண்டும்.

ஜீவக :—என்ன தடை? சகடரே!

சகடர் :—இதுவரைக்கும் அடியேன் சொல் பழுது போனதில்லை. அன்போடு நான் பெற்று வளர்த்த என் மகள் தான் எனது சொல்லை வியர்த்தமாக்குகிருள். அவள் நான் கருதிய மணத்திற்குச் சிறிதும் உடன்படவில்லை. வேண்டியதெல்லாம் எடுத்துச் சொல்லியும், அவள் ஒன்றும் தெரிந்து கொள்கிருளில்லை. இதற்குமேல் எனக்குத் துன்பம் உண்டோ? பெற்ருேர் 'மாற்றம் கேளா மக்கள் கூற்றுவர்' என்று சொல்வது எனக்கே சரி. எனது சொல் வீணுகுமானுல் நான் இருந்து என்ன பயன்? எனக்குத் தள்ளருங்காலம்; பிள்ளையும் வேறில்லை. என் சொற்படி நடத்துவிக்க சமுகத்திற்குக் கிருபை யுண்டாக வேண்டும். இல்லாமற் போனுல் (கண்ணீர் துளித்து) அடியேனது வீட்டுக் கிழவியோடு காசிக்குப்போக உத்தரவு தர வேண்டியதுதான்.

இதைக் கேட்டதும் ஜீவகன் மனம் உருகிவிட்டது. சகடருக்குத் தேறுதல் கூறி வாணியைக் கண்டு பேசி சம்மதிக்கும்படி செய்வதாக உறுதி கூறினன். சகடரது மண ஆசையைப் பற்றி நாராயணன் ஒரு கவியில் குறிப்பாலெடுத்துச் சொல்லினன். அதை உட்கொள்ளாது,

ஜீவக :—வாணியின் கருத்துத்தான் என்ன? உமக்குத் தெரியுமா?

சகடர் :—இலேசாய்த் தெரியும். 'நடராஜன்' என்று இங்கே ஒருவன் இருக்கிருன். அவனுக்குச் சமானமான புருஷர் இல்லையென்று வாணி அவள் தோழிகளிடத்தில் சொல்லிக்கொண் டிருக்கிருளாம்.

600 008

குடில :—(அரசனை நோக்கி) இவருக்குத் தான் என்ன முரண்டு? அவளுடைய இஷ்டப்படி நடந்தால் என்ன ?

சகட :—(குடிலரை நோக்கி) உம்முடைய குழந்தையானால் இப்படிச் சொல்லுவீரா? நான் பட்ட பாடெல்லாம் இதற்காகவா! கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்கவா! (அரசனை நோக்கி) நடராஜனைப் போல நான் கண்டதேயில்லை. சுத்தப் பைத்தியக்காரன். ஒருவர் சொல்லும் கேளான். தனியே சொல்லாடிக் கொண்டிருப்பான். தனியே சிரிப்பான். ஏதாவது இலை, பூ இவை அகப்பட்டுவிட்டால் அவைகளைப் பார்த்துப் பார்த்துச் சந்தோஷத்தால் தலைதடுமாறி விடுவான். தெருவிற் கிடக்கிற சாதாரணக்கல் அவனுக்கு அகப்படாத் திரவியம். அதை ஆயிரந்தடவை பார்ப்பான். இந்தப் பேயனுக்குக் கொடுக்கவா பெண் பெற்றது?

ஜீவக :—ஆமாம். நாமும் பார்த்திருக்கிறோம். அவன் நின்றால் நின்றபடிதான்; இருந்தால் இருந்தபடிதான். ஒன்றிற்கும் பிரயோஜன மில்லை.

குடில :—ஆனால் அழகன் ; ஆநந்தன்.

ஜீவக :—அழகுமட்டும் இருந்து பயன் என்ன ? செய்கை யெல்லாம் அழிவுதானே ? இப்போது அவன் எங்கிருக்கிறான் ?

குடில :—இங்கே தான் இருப்பதாகக் கேள்வி. சிதம்பரத்துக்கு அனுப்பினேன். இதுவரைப் போகவில்லை. அவனுக்கு வேறு ஏதேனும் கட்டளை யுண்டோ ?

ஜீவக :—இல்லை. சிதம்பரத்துக்கே போகட்டும்.

குடில :—உத்தரவு. என்றாலும் அவன் போகமாட்டான். முனிவருக்கு வேண்டியவன் ஆனதால் தான், இதுவரை போகவில்லை போல் தோன்றுகிறது.

ஜீவக :—அது சரியல்லவே! ராஜ்ய காரியத்தில் அவர்க்கென்ன? (சகடரை நோக்கி) நல்லது சகடரே! வாணியைக் கண்டு பேசுவோம். உம்முடைய மகள் அழகில் மயங்கிவிட்டாள் போலிருக்கிறது. உமது இஷ்டப்படி மணம் நடத்து விப்போம். இனித் துயரம் வேண்டாம்.

(இன்னும் வரும்)

நீண்ட ஆயுள் வாழ்ந்த மக்கள்

ஜெர்மனி தேசத்தில் பில்ஸ் என்னும் பிரபு தமது புத்தகத்தில் கீழ்க் கண்டபடி குறித்து வைத்திருக்கிறார்.

1. டிமொகிரெட்டிஸ், இவர் பலகலை பயின்றுள்ள பாவலரா யிருந்து ஜீவித்திருந்த வருஷம் **109.**

2. ரோமன் பட்டணத்திலுள்ள ஓர் ஸ்திரீ நாடகசாலையில் நடித்து ஜீவித்திருந்த வருஷம் **104.**

3. ஷை மற்றொரு ஸ்திரீ ஜீவித்திருந்த வருஷம் **112.**

4. ஒரு பிரான்சு தேசத்திய நாடகமாடும் ஸ்திரீ ஜீவித்திருந்த வருஷம் **111**

5. ஒரு சுவேததேசத்து போர்வீரர் 97 வருஷம் இராணுவத்திலமர்ந்து உத்தியோகம் செய்தார். அக்காலத்தில் 17 யுத்தங்களுக்குச் சென்றிருந்தார். கொஞ்சகாலம் கடுமையாய் சிறையில் அடைபட்டிருந்தனர். இவர் இரண்டாவது விவாஹம் 110-வது வயதில் செய்து கொண்டு ஜீவித்திருந்த வருஷம் **112.**

6. அபிங்ஹாம் என்னும் ஓர் ஆங்கிலேய படைவீரர் ஜீவித்திருந்த வருஷம் **140.**

7. தாமஸ் பார் என்பவர் வெகு சாந்தமுள்ளவர். சாரல்ஸ் மஹாராஜாவால் கொடுக்கப்பட்ட ஓர் நல் விருந்தருந்தியதால் இறந்தார். இவர் ஜீவித்திருந்த வருஷம் **152.**

8. நார்வே தேசத்து டிரேக்கன் பர்ஜ் என்பவர் துருக்கியர்களால் 15 வருஷம் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இன்னும் அடிமையாகவுமிருந்து நூற்றி முப்பதாவது வயதிலும் விவாஹம் செய்து கொண்டனர். இவர் ஜீவித்திருந்த வருஷம் **146.**

9. ஜோசப் செரிங்டன் என்பவர் இறக்கும்பொழுது, இவர் முதல் குமாரனுக்கு வயது 108. இரண்டாவது குமாரனுக்கு வயது **100.**

10. ஹங்கேரி தேசத்தின் பாபின் என்பவர் 1720-ல் இறக்கும் பொழுது அவர் மனைவியின் வயது 164. அவர் குமாரன் வயது 115. இவர் ஜீவித்திருந்த வருஷம் **172.**

11. ஒரு ருஷியாதேசத்தவர் 1623ஹூல் பிறந்து, 1825ஹூல் இறந்தார். ஜீவித்திருந்த வருஷம் **202.**

12. ஒரு ஆங்கிலேய பயிர்த்தொழில் செய்பவர் தமது நூற்றிருபதாவது வயதிலும் கடினமான வேலை செய்து கொண்டிருந்தார். இவர் ஜீவித்திருந்த வருஷம் **172.**

13. ஒரு ஆங்கிலேய பிரபு 1500ஹூல் பிறந்து 1670ஹூல் இறந்தார். ஜீவித்திருந்த வருஷம் **170.**

14. ஒரு தென்மார்க்கர் 1624ஹூல் பிறந்து 1770ஹூல் இறந்தார். இவரது முதல் விவாஹம் 111-வது வயதில் நடந்தது. அப்பொழுது அவர் மனைவியின் வயது 60. இவர் ஜீவித்திருந்த வருஷம் **146.**

15. ஹங்கேரிய நாட்டிலுள்ள ஒருவர் 1724ஹூல் இறந்தார். அப்பொழுது அவருக்கு வயது **185.**

16. தாமஸ் கார்ன் 1588ஹூல் பிறந்து 1795ஹூல் இறந்தார். ஜீவித்திருந்த வருஷம் **207.**

இவரது ஜீவியசரித்திரம் செண்ட் லியோனுர்டு சர்ச்சில் (கோவில்) குறித்திருக்கிறதாய் சொல்லப்படுகிறது.

வாசகர்களே! நீங்களும் நீண்டகாலம் சுகவாழ்வில் வாழ விரும்புவீர்களா? அப்படியானல் பலஹீனமும், வியாதியும் அணுகவிடாது, சரீரப் பயிற்சியில் ஒவ்வொருவரும் பழகி சரீரத்தை நோய்க்கிடங்கொடாது வைத்துக் கொள்வதோடு, கூடுமானவரை மனத்தைக் கவலைக் கிடம்கொடாது அமைதியாகவும் உல்லாசமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய பயிற்சியானது ஆரோக்கியத்தையும், திடசரீரத்தையும், நீண்ட ஆயுளையும் அளிக்குமென்பது திண்ணம்.

பி. வி. ராஜன் "பட்டணம் பொடி"

எக்ஸிபிஷன்களில் ஸர்ட்டிபிகேட்டும் அநேக பிரசித்தி பெற்ற டாக்டர்களால் ஸர்டிபிகேட்டும் பெற்றவை.

உயர்ந்த புகையிலையினால் குணத்தில் உயர்ந்ததாயும் மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயும் நீண்ட நாள் கெடாமலிருக்கும்படியும் தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டு வெகு நாட்களாக மார்க்கட்டில் நல்ல பெயர் பெற்றுவருகிறது. வெளியூர்களுக்கு விலை சரசமாய் சப்ளை செய்து வருகிறோம். ஒரு தடவை எங்களிடம் தருவித்துப் பார்த்தால் அதன் உண்மை தெரிய வரும். வீசை 1-க்கு டின் உள்பட விலை ரூ. 3-10-0. தபால் செலவு அல்லது ரெயில் செலவு பிரத்தியேகம். ஒரு சேர், அரை சேர் டின்களாகவும் அனுப்பப்படும்.

R. S. சுகந்த மூக்குத்தூள்.—இது நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டது. இதை உபயோகிப்பதனால் ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத் தலைநோய், மண்டைக்குத்தல், கண்ணி லேற்படும் எல்லா வியாதிகளையும், மூளையைச் சேர்ந்த சகல வியாதிகளையும் போக்கி குணப்படுத்தும்.

புட்டி 1-க்கு விலை	ரூ0-4-0	ஒரு சேர் டின் 1-க்கு ரூ 1-12-0
டஜன் 1-க்கு ,,	ரூ2-4-0	

தபாற் செலவு அல்லது ரெயில் சார்ஜு பிரத்தியேகம்.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

கலியாண காலம்.

விலை சரசம்! நாணயமானது!!

பெங்களூர், பனாரஸ், காராச்சி பாடர்ன் சேலைகள், புதுமாதிரி வேலைகள் செய்தது. தற்கால நாகரீகத்திற் கேற்றது.

மதுரை, துயிலி, துறையூர் வேஸ்டிகள், துப்பட்டாகள் எங்களிடம் ஏராளமாய் ஸ்டாக் உண்டு. தேவைக்கு ஆர்டர் செய்தால் நாணயம் விளங்கும்.

முத்து க. ரு. மு. முத்தைய்யா செட்டியபர்
பட்டு ஜவுளி வர்த்தகம்,
பெரிய தெரு,
கும்பகோணம்.

தந்தி அட்ரஸ்:
"காருண்யம்."

ரஜபன்சி மாத்திரைகளும் தைலமும்.



ஆதிகாலத்தில் இந்த மாத்திரைகள் டில்லி பாதுஷாக்களால் மிகவும் உபயோகிக்கப்பட்டு வந்தது. இது புராதன உருது பாஷை சாஸ்திரத்தின்படி வெகு பிரயாசையுடனும், அதிக பண விரயத்துடனும், விலை உயர்ந்த மருந்து சரக்குகள், மலை மூலிகைகளோடும், **நபும்சகத்வத்தை போக்கு வதற்கு அதி உபயோகமான ஆண் கரடி ஜீவாதார சத்தின் தைலமும்** சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி மாத்திரைகள் உள்ளுக்கு சாப்பிடுவதற்கும் தைலம் மேல் பூச்சுக்காகவும், தயார் செய்யப்பட்டிருக்கிறது. இம்மாத்திரைகள், பலஹீனம், மேக சம்பந்தமான சகல வியாதிகள் ஸ்வப்ன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும், முழு நபும்சகர்கள், மாத்திரை, தைலம் இரண்டும் 10 நாளைக்கு விடாமல் உபயோகிக்க வேண்டியது. இம்மாதிரி மருந்து இவ்வுலகில் இதுவரையில் வெளிவரவில்லை யென்று உறுதியாய் சொல்வோம். இது நபும்சகர்களுக்கு திவ்ய சஞ்சீவி. ஒருமுறை உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும்.

20-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு ரூ. 5-0-0	}	பாக்கிங், வி. பி.
1-அவுன்சு தைலம் ,, ,, ,, 5-0-0	}	சார்ஜ் வேறு.

மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு முன் பணம் அனுப்பப்படவேண்டும்.

ரஜபன்சி ஆபீஸ்,
நெ. 38, ஜெனரல் முத்தையா முதலி தெரு,
மதருஸ்.

லோகோபகாரி

முப்பது வருடங்களாக நிலவும்
வாரப் பத்திரிகை.

ஆசிரியர் : பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை.
வருஷ சந்தா :—உள் நாடு ரூ. **4.** வெளி நாடு ரூ. **6.**
மாதிரிப்பிரதி இனாம்.
காரியஸ்தர், லோகோபகாரி பத்திரிகாலயம்,
கோமளேஸ்வரன் பேட்டை :: :: சென்னை.

சம்சார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

பீஜபந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் துரப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா 1-க்கு ரூ. **2**. வி. பி. சார்ஜ் வேறு. சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,
நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி,
ஜீ. டி., மதராஸ்.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இவ்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணா 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி,
சவுகார்பேட்டை, மதராஸ்

இது ஒரு அதிசயமல்லவா?

உண்மையில் இது ஒரு அதிசயம்தான். ஏனெனில் எல்லாக் கடியாரங்களுக்கு ஓடுவதற்கு சாவி கொடுத்தால், இதற்கு கொடுக்க வேண்டியது அவசியமில்லை. ஒரு பெரியகடியாரம் சுவற்றில் மாட்டும்பொழுது சரிமட்டம் பார்த்து வைக்கவேண்டியதாக இருக்கிறது, இதற்கு அது தேவையில்லை. எந்த சுவற்றில் மாட்டின போதிலும் மணி மிக ரம்மியமாக காட்டும். ஒரு நாளும் மணி அதிகமாகவும் கம்மியாகவும் போகமாட்டாது. ஆகையால் இது ஒரு அதிசயமாகும். புதியதாக ஜெர்மணி தேசத்தில் இருந்து வரவழைக்கப் பட்டு இருக்கிறது. இந்த கடியாரம் ஓடவேண்டும் என்று விருப்பம் இருந்தால் ஔடியாரத்தின் கீழ்பாகத்தில் இருக்கும் ஒரு குண்டுவை மேல் பாகத்திற்குத் தள்ள வேண்டும். மறுநாளும் இப்படியே செய்யவேண்டும். பார்வைக்கு மிக்க அழகாயிருக்கும். உடனே ஒன்றை வரவழைத்து பாருங்கள். கடியாரம் 1-க்கு விலை ரூ. 3 0 0.

வி. எ. எஸ். பாணி அண்டு கம்பேனி,

தபால்பெட்டி, நெ. 17, மதராஸ்.

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு

பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட் டிருக்கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ.	அ.	ப.
ஆறு காண்டம் ஒரே செட்டு பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை	15	0	0
சுந்தரகாண்டம் பாராயணத்துக்கு	2	4	0

இன்னும் இதர தமிழ் புஸ்தகங்களும் கிடைக்கும்.

காந்தன் & ராஜன்,

புஸ்தக வியாபாரிகள்,

மைலாப்பூர், சென்னை.

PRINTING

VEST & Co.,

14, Mount Road, MADRAS.

வெஸ்ட் அண்டு கோ,

(ஸ்தாபித வருஷம் 1841)

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

வெஸ்ட் அண்டு கோ,

14, மவுண்ட் ரோடு,

சென்னை.

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்து விடாதீர்கள்.

ஷர்டடு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரூ. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரூ. 6, 6-8. 8 கெஜம் 44" ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரூ. 7, 8.

வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

கோகர்ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபாற் பெட்டி 99, - - மதராஸ்.

குழந்தைகள் பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

குழந்தைகளின் மனத்தை ரமிக்க செய்வனவும் இந்தியர்களின் வீடுகளில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. குழந்தைகள் விளையாடும் சாமான் ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 வித சாமான்களடங்கி யிருக்கின்றன. அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பெற்று மிகுந்த அழகோடும் பளபளப்போடு மிருக்கும்.

கே. எஸ். முத்தையா அண்டு கோ.,
சில்க் அவுஸ், காசி.

இந்த விளையாட்டு சாமான்கள் இந்துக்களாலும், மகமதியாராலும், கிறிஸ்தவராலும், ஆங்கிலேயராலும் மதிக்கப்பட்டது

கே. 1 ஜோடிப்பு 1-க்கு விலை ரூ. 4-8.
கே. 2 ஜோடிப்பு 1-க்கு விலை ரூ. 3-4.

Printed by M. A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.